
தீபம் : 02

# ஆத்மஜோதி

ஒளி : 14

ஆத்மீக மாத சஞ்சிகை

ஆனி- 2006



புசண்டகிரி
ஸ்ரீலஸ்ரீ நாகநாத சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பர்கள் மூன்று விதம்

நமக்குக் கிடைத்திருக்கும் நண்பர்களை மூன்று வகையாகப் பிரித்து விடலாம்: பனைமரம், தென்னைமரம், பாக்குமரம். எப்படி?

பனைமரம் தானாக முளைத்து, தானாகத் தண்ணீர் குடித்து, தானாக வளரும். அது போல் வலிய வந்து நமக்கு உதவி செய்பவர்கள் சிலர்.

தென்னைமரம் எப்பொழுதாவது தண்ணீர் விட்டால் போதும், வளர்ந்து விடும். அதுபோல் எப்போதாவது உதவி செய்தால் அதை நினைவில் வைத்து நமக்கு அடிக்கடி உதவுபவர் சிலர்.

பாக்குமரம் தினமும் தண்ணீர் விட்டால் தான் வளரும். அதுபோல் தினமும் உதவி செய்தால்தான் சில நண்பர்கள் நம்மை கவனிப்பார்கள்.

*உங்களுக்குக் கிடைத்த நண்பர்கள் எந்தவகை?*
*நீங்கள் எந்த வகை?*

# நம்பிக்கை

முன்பின் தெரியாத ஆஸ்பத்திரி கம்பவுண்டர் கொடுக்கும் மருந்தை நம்பி சாப்பிடுகிறோம்.

காரில் போகும் போது, டிரைவரை நம்பி சுகமாகத் தூங்குகிறோம்.

உணவு விடுதியில் சப்ளையரை நம்பி சாப்பிடுகிறோம்.

ஆனால், இந்த எல்லா இயக்கங்களுக்கும் மூலகாரணமான இறைவனை நம்ப யோசிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்



உ
சிவமயம்
# ஆத்மஜோதி
தாபிதம் : 1948

# ARTHMA JOTHY
Est. 1948
ISSN 17039185

தீபம் : ஒளி
பார்திப வருடம்
ஆனி
2006

பதிப்பாசிரியர்
நா. முருகையா
தியான
மணிமண்டபம்

எழுத்தமைப்பும்
அச்சுப் பதிப்பும்
ஜய்ராம் பிறின்ரேஸ்

வெளியீடு
ஆத்மஜோதி
தியான மணிமண்டபம்
ஏழாலை.

தொடர்பு முகவரி
நா.முருகையா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

## உள்ளடக்கம்

1. சிவஞான போத சாரம் 02
2. வர வேணும், வர வேணும் 03
3. ஓ! என் உயிர் யாழே 03
4. புசண்டகிரி ஸ்ரீலஸ்ரீ நாகநாத சுவாமிகள் 04
5. தியானம் 07
6. ஞானானந்த தரிசனம் 11
7. பேருராதீனத்தின் இந்துசமயப் பணிகள் 15
8. மந்திர ஜெபம் செய்யுங்கள் 21
9. நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை 23
10. அன்றைய யாழ்ப்பாணம் 24
11. நூரளை ஸ்ரீ இலங்காதீஸ்வரர் 25
12. இந்தோனேசியாவிற்கு இந்துசமய வருகை 28
13. ஆத்திசூடி 35

| | | |
|---|---|---|
| பிரதி | :- | 30/= |
| வருட சந்தா | :- | 400/= |
| ஆயுள் சந்தா | :- | 3000/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞான போத சாரம்*

## திருவாசகம்

**முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை**
**பத்தி நெறி அறிவித்து பழ வினைகள் பாறும் வண்ணம்**
**சித்த மலம் அறுவித்து சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறுஆர் பெறுவார் அச்சோவே.**

வாழ்வை வளம்படுத்தத் தோன்றிய சமயங்கள் பல. அவற்றுள் அகமனம், சித்தம், உணர்ச்சி, புத்தியெனுமிவற்றுக்கு முறையே விடயங்களாகிய கிரியை நீதிநெறி,வணக்கமுறை,தத்துவசாத்திரம் எனும் நான்கு பிரிவுகளையும் தம்மகத்தே கொண்ட சமயங்களே மேலான சமயங்களாகும். இதன்படி ஆராயின் சித்தாந்த சைவசமயமே அதிசிறந்ததெனத் துணிந்து கூறலாம் வேதம், ஆகமம், திருமுறை, மெய்கண்ட சாத்திரம் எனுமிவை இச்சமயத்துக்கு ஆதாரமாயமைகின்றன.

சைவசமய நூல்கள் பலவாயிருத்தலின் அவற்றை ஆராய்ந்து ஒற்றுமை காண வாழ்க்கைமுறை இடமளிக்கவில்லை ஒரு சிலவற்றைப் படிப்பதால் முரண்பாடுகளும் சிக்கல்களுமே உண்டாகின்றன. அவற்றை நீக்குவதில் மெய்கண்ட சாத்திரங்கள் முதலிடம் பெறும். அவற்றுள் முதன்மையானதும் சித்தாந்த சைவநெறியின் ஞானபாதப் பொருளிதுவெனத் திட்டவட்டமாகக் கூறுவது மாயுள்ளது. மெய்கண்டர் அருளிய சிவஞானபோதமெனும் நூலாகும். அது பதி, பசு, பாசமெனும் முப்பொருளையும் தெளிவாக விளக்குகின்றது. ஆயினும் வேதம் ஆகம முதலாம் நூல்களைக் கற்றுச் சரியை, கிரியை, யோக நெறிகள் கைவரப்பெற்று முத்தியை விரும்பி நின்றோர்க்கு ஞானபாதப் பொருளை விளக்குனுதற்கெழுந்த நூலாதலின் அதை இலகுவில் கற்றுத் தெளிவு பெறமுடியாது. விளக்குதற்கெழுந்த வழிநூல் சார்பு நூல்களும் விரிந்து போகின்றமையின் எம்மிற் பலர் அவற்றையும் பயன்படுத்த முடியவில்லை.

இறைவனருளைப் பெறக் கடவுள் நம்பிக்கையுடைய பல சமயத்தவர்கள் தத்தமக்கேற்ற சாதனங்களைச் (முயற்சிகள்) செய்கின்றனர். எனினும் அச்சாதனங்கள் உரியமுறையில் அமைய வேண்டும். அவ்வாறில்லையேல் அருளைப் பெறமுடியாது. இறைவன் பசுபாச ஞானங்களால் அறியப்படாத காரணத்தினாலேயே சாதனம் மிக இன்றியமையாதது. இறைவன் பசுபாச ஞானங்களால் அறியப்படின் சாதனங்கள் தேவையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவேணும் வரவேணும்

வரவேணும் வரவேணும் கந்தையா நல்லூர்க் கந்தையா
வந்தெமக்கு அருள் தந்தால்
குறையோ! உமக்கொரு குறையோ!

யாழ் முகாரி பாடியது போதும் ஐயா
பாழாய் துகளாவதை முடிப்பாய் - முருகையா
சென்னீரும் கண்ணீரும் துடைக்க
உன் ஒரு கை வேண்டுமையா

– வரவேணும்

அழுவதும் தொழுவதும் நீ அறியாயோ
நாளும் படும் பாடு உனக்கவமானமிலையோ
அம்மை மீனாட்சி சுதனே ஷிவங்கரி போற்றும் குகனே
கைவிடல் முறையோ! கருணையில் குறைவோ!

– வரவேணும்.

ஸஸஸஸஸஸஸஸ

# ஓ! என் உயிர் யாழே

ஓ.............. ஓ.............. ஓ..............
என் உயிர் யாழே
இதய கோடி வணக்கம்

வீரம் காட்டிய நிலமே
விவேகம் காட்டி எழுவாய் ஓ! என்.....

வளர்க கலைகள், வளர்க தொழில்கள்
புதிய நிலைகள் புதிய நெறிகள்
செம்மைச் சிந்தை செயலின் வேகம்
வியன் உலகின் விந்தைப் படைப்பு ஓ! என்.......

புதுயுக மனிதர் புதுயுகம் படைத்திட
எழுக பொலிவுடன் தவநிலம் போற்ற
ஒழிக அல்லல், அழிக வசைகள்
வாழ்க வளமே வையகத் துயர்ந்தே ஓ! என்......

ஓ.......... ஓ.......... ஓம்..........

அருணாசலத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புசண்டகிரி

# ஸ்ரீலஸ்ரீ நாகநாத சுவாமிகள்

இந்தியாவில் யானை மலையில் - 16 வருடம் தவம் இயற்றியமை.

நாகத்துடன் தியானம், தவம் புரிவதால் நாகநாத சித்தர் என வழங்கப் பட்டமை.

செல்லத்துரை என்பவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இளம் வயதில் மிகவும் முரட்டுத்தனமாக வாழ்ந்ததால்-அவரைத் தமது சீடராக்கிப் பண்படுத் தினார். குருநாதர் தமது கோயிலாகிய ஸ்ரீ தண்டாயுதபாணி கோயிலை தம்பவளை கண்டியில் கட்டுவித்து அந்தக் கோயில் பூசகராகச் சீடர் செல்லத்துரையை உருவாக்கினார்.

செல்லத்துரையின் பிள்ளைகள் நாகநாத சுவாமியை அன்போடு தாத்தா என அழைப்பர். குருநாதர் அந்தப் பிள்ளைகட்கு மாலை வேளைகளில் சுவாமிக்குப் பல தேவாரங்களைப் பாடி வர தொழுதுவரும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். குருநாதர் ஒரே வேளையில் பல இடங்களில் காட்சி கொடுத்தும் இருக்கிறார் அன்பர்கட்கு. சீடர் செல்லத்துரைக்குக் கண்டி பெரிய வைத்தியசாலையில் ஆண்பிள்ளை பிறந்ததை ஞானத்தால் உணர்ந்த குருநாதர் - சித்திவினாயகம் பிறந்து விட்டான் என்று தம்பவளைக் கோயில் மலைமேல் நின்றுகூவினாராம். இந்தியாவில் ஒரு குடிசையில் போய் தண்ணீர் கேட்க அவர்கள் கேலி பண்ணி ஏச குருநாதர் சாபம் கொடுக்க வீடு பற்றி எரிந்தது. உடனே அவர்கள் காலில் விழுந்து குருநாதரிடம் மன்னிப்புக் கோரினர். இலங்கையில் நாகநாதரிடம் மக்கள் தங்கள் குறைகள் நீங்க வேண்டி ஏராளமானோர் வந்து குவிவார்கள். அவ்வளவு மக்களுக்கும் அருள் அள்ளி வழங்குவார். தயக்கமின்றி, குருநாதர் அவர் இந்தியா சென்று அடக்கமான பின்பு,சீடர் செல்லத்துரையிடம், கோயிலுக்கு ஏராளமான மக்கள் வந்து வணங்கி நேர்த்திகளை நிறைவேற்றிச் செல்வார்கள். குருநாதர் நீள அங்கி, கழுத்தில் உருத்திராட்ச மாலை, தாடிகளுடன் காணப்படுவார். சீடர் செல்லத்துரை வேட்டி, நைசனல் சேட் கழுத்தில் உருத்திராட்ச மாலை என்பவற்றுடன் காணப்படுவார். மனைவி சிவபாக்கியம் அவருக்கு ஏற்ற பதிவிரதையாகத் தனது கடமைகளைக் குறைவின்றி நிறைவேற்றி வந்தார். ஆத்மீக ஈடுபாட்டுடன் கோயிலில் தைப்பூசத் திருவிழாவும், பங்குனி உத்தரத்திற்குக் காவடி எடுத்தும் மாரி அம்மனுக்குப் பெருவிழா வருடா வருடம் விமரிசையாக நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாதர் கண்டி தலதாமாளிகையிலும் தியானத்தில் ஈடுபட்டு இருப்பார். கண்டி தம்பவளைக் கோயிலில் கீழ் குகையில் நாக பாம்புடன் தவத்தில் இருப்பார். நெடுக 1958 இனக்கலவரத்தின் காரணமாக குருநாதரின் சீடர் செல்லத்துரை தனது குடும்பத்தாருடன் கோயிலில் உள்ள சில விக்கிரகங்களைக் கொண்டு மாங்குளம் வந்து சேர்ந்தார். செல்லத்துரையின் மகள் தெய்வயானையின் வீட்டில் விக்கிரகங்களை வைத்து ஆராதனை நடத்தப்பட்டது.

மாங்குளத்தில் மாவடி சித்தி விநாயகர் என்ற பெயருடன் புதிய பிள்ளையார் கோயில் திருப்பணி சீடர் செல்லத்துரையால் ஆரம்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற முன்பு அவர் இறையருள் சேர்ந்தார். அவரது அஸ்தி வைக்கப்பட்டு விஸ்ணு கோயில் ஒன்று கட்டப்பட்டு உள்ளது. மாங்குளம் கண்டி வீதியில் மகள் தெய்வானையின் வளவில் மிக அண்மைக் காலத்தில் நாகநாத சுவாமிகளின் கம்பவளை ஸ்ரீ தண்டாயுதபாணி கோயில் பெரும்பான்மை இன மக்களால் வழிமறிக்கப்பட்டு பூசையின்றி கோயில் பூட்டப்பட்டு இருந்தது. கோயில் பூட்டப் படுவதற்குக் காரணமாக இருந்தவரின் வீட்டு வழியில் 10 நாட்களாக நாகபாம்பு படுத்துக் கிடந்தது. இச்செய்தி பத்திரிகை வாயிலாக இவ்வழக்கை நடத்தும் நீதிபதிக்குத் தெரிய வந்தது. அவர் உடனடியாக கோயிலுக்குச் செல்வதற்கு வழி விடுமாறு கட்டளையிட்டார்.

அதன் பின்பு கோயில் திறக்கப்பட்டு விளக்கு வைத்து பூசைகள் இன்று கிரமமாக நடைபெற்று வருகிறது. இவை யாவும் குருநாதரின் அதிசயங்கள்தான். கோவில் அமைந்த மலைக் குகையின் கீழ் பழைய அரசர் காலத்துப் பொக்கிசங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதால் அங்கு பலவிதமான தீமையான நிகழ்வுகள் நடைபெற்று வருவதால் மக்களின் பயத்தைப் போக்கி குருநாதர் கோயில் அமைத்து வழிபட வழி வகுத்தார் என்பது வரலாறு. செல்லத்துரையின் மகள் அன்னலட்சுமியைத் திருமணம் செய்த சிவக்கொழுந்து ஆகிய மருமகன் நாகநாத சுவாமியைப் பற்றி இகழ்வாக நினைக்க அப்படியே, மயக்கநிலை ஏற்பட அவரின் மனக்கண் முன்னே குருநாதர் காட்சி கொடுத்தார். அன்று தொடக்கம் சுவாமிகளின் தீவிர பக்தர் ஆனார்.

சுவாமிகளை இங்குள்ள செட்டிமார் அடிக்கடி இந்தியாவிற்கும், இலங்கைக்கும் கூட்டிச் செல்வார்கள். மக்கள் குருநாதரின் காலடியில் வெற்றிலை புகையிலைகளைக் காணிக்கையாகச் செலுத்தி அவரிடம் அருள்வாக்குக் கேட்பார்கள். சுவாமிகள் நடப்பது, நடக்கப் போவது அனைத்தையும் திகதி நேரக் கணிப்புடன் மிகச் சரியாகக் கூறுவார். பின்பு பவுண் நூல் கலந்த துணிகளால் சுவாமிகளைப் பாராட்டிப் போர்த்து மகிழ்வடைவார்கள்.

சுவாமிகள் சொல்லிக் கொடுக்கும் தோத்திரம் பின்வருமாறு:-

**"ஆதியாய் வேதம் நான்காய் அடிமுடி தெரியா வண்ணம்**
**ஜோதியாய் நிறைவாய் நின்ற துணைவனே போற்றி போற்றி"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத்துரையின் மகள் தெய்வானை மாங்குளம் விஸ்ணு கோயிலை அமைக்கப் படாதபாடு பட்டுக் கட்டிமுடித்தார். அவரின் சகோதரி நாகம்மாவும் பிற்காலத்தில் ஆத்ம தாகம் கொண்டு சுவாமி நாகநாதரின் புகழ் கூறித் தொண்டாற்றினார்.

அவர் இயற்றிய மந்திரம் :-

" அனி ஓம் நம நாராயண
நாக நாத பிரபோ "

தம்பவளைக் கோயிலில் முன்பு எல்லாம் எப்பொழுதும் அன்னதானம் அடியார்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. தற்போது, நெருக்கடியான காலகட்டத்தில் எல்லாம் கைவிடப்பட்டு பூசை மாத்திரம் ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

மாங்குளம் விஸ்ணு கோயிலுக்கு, தம்பவளைக் கோவிலுக்குச் செல்லும் துறவிகளும் ஆத்மீக வாதிகளும் வந்து வணங்கிப் போயினர்.

தற்போதைய நாட்டுச் சூழ்நிலை காரணமாக, கோயில் முறையற்ற பராமரிப்பு இன்றியும் அடியார்களுக்குப் போக்குவரத்து வசதி இன்றியும் காணப்படுகிறது.

தம்பவளைக் கோயில் மலையின் கீழ் பகுதியில் கல்லில் எழுத்து பொறிக்கப் பட்டுள்ளது. அந்த வாசகம் பின்வருமாறு:-

"நாகநாத சித்தர் சீசன் செல்லத்துரை
புசண்டகிரி குருநாதர் சீசன் நாகநாத சுவாமி திருப்பணி" 01.01.1921

இதனை இன்றும் காணக்கூடியதாக உள்ளது. இனி எல்லாம் குருநாதர் நாகநாத சுவாமிகளின் அருள்படி நடக்கட்டும்.

- நன்றி -

நாம் யாரிடமும் பிரதி பலன் கருதி அன்பு செலுத்தக்கூடாது. பலனை எதிர்நோக்கி அன்பு காட்டுவது என்பது ஒரு வியாபாரத்தைப் போன்றது. அன்புக்கு வியாபாரத்துடன் எந்த சம்பந்தமும் கிடையாது. அன்பு என்பது கொடுப்பது வாங்குவது என்றெல்லாம் இணைத்துப் பார்ப்பதல்ல எந்தப் பலனும் எதிர்பாராது சரணாகதியாவது தான் அன்பு.

ச.சா.பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

தொடர்ச்சி........

## தியானம் செய்யும் உதவிகள்

இவ்வகைப்பட்ட தியானத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு முன்னால்.

மன ஒருமைப்பாடு என்பது பற்றி இன்னும் கொஞ்சம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

ஏற்கெனவே கூறியபடி மன ஒருமைப்பாடு என்பது தியானம் என்ற முலாம் பூசிவந்த ஒரு கவரிங் சங்கிலியைப் போன்றது.

அதைத் தங்கச் சங்கிலி என்று கூறுவோர் தங்களையும் ஏமாற்றிக் கொள்வதுடன்-

தங்களைச் சார்ந்த பிறரையும் ஏமாற்றுபவர்களாக உள்ளனர்.

சுத்தமான தங்கத்திற்குப் பகட்டான விளம்பரம் தேவையில்லை. கூவி விற்க வேண்டிய அவசியமுமில்லை.

கவரிங்குக்கே இது அத்தியாவசியம்.

மன ஒருமைப்பாடுதான் தியானம் என்று அநேகர் நம்புகின்ற இவ்வேளையில்-

அது தியானமாகாது என்பதை விளக்கப் பின்வரும் உதாரணங்களே போதுமானனை.

மன ஒருமைப்பாடு என்னும் நிகழ்ச்சியில் பார்வையிலிருந்து ஏனைய பொறிகள் வரை அடக்கப்படுவதில்லை.

அவை அனைத்தும் இயங்கிக் கொண்டே தான் உள்ளன.

உதாரணமாகத் தனக்கு எதிரே உள்ள உருவத்தை, புள்ளியை, வெளிச்சத்தைக் கண்கள் பார்க்கின்றன. வெளிப்புறச் சத்தங்களைக் கேட்கின்றன.

ஆனால் தியானம் என்ற உன்னத நிலை வரும்போது எந்தப் பொறிகளும் வேலை செய்வதில்லை. அவை தம்முடைய இயக்கத்தை நிறுத்திக் கொள்கின்றன.

அப்போது வேலை செய்வதெல்லாம் மனம், மனம், மனம் மட்டுந்தான்.

இவ்வேளையில் அது தன்னைச் சுற்றிய புறச் சூழ்நிலையைக் கவனிப்பதில்லை. இதனால் வெளிப் பிரக்ஞைகள் அற்றுப் போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பொறிகளும் இயங்கும் தியானத்தை மன ஒருமைப்பாடு என்றும் எல்லாப் பொறிகளும் அடங்கி மனம் மட்டும் இயங்கும் தியானத்தைத் தியானம் என்றும் கூறுகின்றோம்.

## போராட்ட மயமான தியானம்

எவர் ஒருவருக்குத் தீராத ஆசைகள் இருக்கின்றனவோ-

நிறைவேறாத கனவுகள் இருக்கின்றனவோ-

அதுவரையில் தியானம் எனப்படுவது பரிசுத்தமாக அமைய வழியே இல்லை. அது அன்றைய போராட்டமாகவே அமைந்துவிடும்.

எவர் ஒருவர் புற உலகிலிருந்து விடுபட்டவராக ஆசைகள் அற்றவராகக் காணப்படுகின்றாரோ.

நல்ல வழியைத் தேர்ந்தெடுத்து கூடியவரை வாழ முயலுகின்றாரோ-

அவர்களுக்கே தியானம் சித்திக்கின்றது.

## தியானமே ஓர் அரிய முயற்சி

தியானத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் அதன் உண்மைத் தன்மை என்ன என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

தியானம் எனப்படுவது இதுவரை சொல்லப்பட்ட விஷயங்களிலிருந்து-

பொறிகளை அடக்கி அல்லது கட்டுப்படுத்தி அல்லது நம்மை விட்டு வேறுபடுத்தி வைக்கக்கூடிய ஒரு பயிற்சி என்று எவராவது நினைத்திருந்தால் அது தவறான செயலாகும்.

அவ்வாறு யார் ஒருவர் செய்கின்றாரோ அவரைச் சத்தியத்தை விட்டு-

உண்மையை விட்டுத் தப்பி ஓடிச் செல்லுபவர் என்று கூடக் குறிக்கலாம்.

## தியானம் எளிதானதா?

இன்றுள்ள மக்கள் அனைவரும் எண்ணுவதைப் போல தியானம் எனப்படுவது மிகவும் எளிமையான ஒருசெயலே அன்று.

அது மிகக் கடுமையானது.
செய்வதற்கு அருமையானது.

ஏற்கனவே தியான முறையில் இரண்டு நெறிகள் விளக்கப்பட்டிருக்கின்றன.

அவற்றில் முதல் நெறிதான் பக்தி நெறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பக்தி நெறியும் இரண்டு வேறு பிரிவுகளாகப் பிரிகின்றன.

இவை கீழ்வருமாறு.

1. பிரார்த்தனை 2. பூஜை

இவை இரண்டையும் ஒழுங்காக எவர் ஒருவர் கடைப்பிடிக்கின்றாரோ அவருக்கே தியானம் சித்திக்கின்றது.

## பிரார்த்தனையும் பூஜையும் அவசியமா?

நான் ஒரு நாத்திகன் அல்லது பகுத்தறிவுவாதி. நான் கடவுளை நம்புவதே இல்லை என்றாலும் தியானத்தை நம்புகிறேன். எனவே பிரார்த்தனையும் பூஜையுமில்லாத தியானத்திற்கு வழிகாட்ட முடியுமா? என்று சிலர் கேட்கக்கூடும்.

அவர்களுக்கு ஒரு வார்த்தை — எங்கே பிரார்த்தனையும் பூஜையும் செய்யப் படவில்லையோ அங்கே.

மனம் ஒழுங்குக்கு வராது. எவர் ஒருவர் பிரார்த்தனையையும் பூஜையையும் ஒழுங்காகச் செய்து கொண்டு வருகின்றாரோ.

அவர்களுடைய மனமானது அவர்களை அறியாமல் உயர்த்தப்பட்டுக் கொண்டே வரும் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

ஏற்கனவே ஒருமைப்பாட்டின் மூலம் நன்கு குவிந்து கிடக்கும் மனத்தை இது சீராக்கி ஓர் உயர்ந்த பக்குவ நிலைக்குக் கொண்டு செல்லுகிறது.

## வல்லமையில்லாத தியானம்

"தியானத்தை என்னால் செய்ய முடியும். நான் அதில் வல்லவன் அல்லது வல்லவள்" என மார்தட்டிக் கொள்ளும் ஒருவரின் தியானத்தை உற்று ஆராய்ந்தால், அது மேலோட்டமான தியானமாகவே இருக்கும்.

ஆனால், மனத்தின் ஆழமான பகுதிகளில் அந்தத் தியானத்தை ஆடைபோல மேலேயே ஒதுக்கி வைத்து விட்டு —

அடிப்பக்கத்தில் அதன் இயல்புக்கு ஏற்பவே அது சென்று கொண்டே இருக்கும். இவ்வாறான தியானம் தான் வலிமையில்லாத தியானம் என்று அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிமையுள்ள தியானம்

வலிமையுள்ள தியானத்தின் தன்மையோ வேறு வகைப்பட்டது.

அது பிரார்த்தனையினாலும், பூஜையினாலும், தன்னை வலுப்படுத்திக் கொண்டதாக இருக்கும்.

வலிமையுள்ள, உண்மையான தியானம் எனப்படுவது நமக்கும், இறைவனுக்கும் இடையிலே கண்ணுக்குத் தெரியாத ஒரு பாலத்தை அமைத்திருக்கும்.

மனித மனத்தின் இயல்பு விசித்திரமானது.

அதுவும் இன்றைய விஞ்ஞானயுகம் வேடிக்கையானது.

அது கண்ணால் காணப்படக்கூடிய விஷயங்களை மட்டுமே நம்பும் தன்மை வாய்ந்தது.

கண்ணால் காணாத எதையும் நம்புவதில்லை. இந்த ரீதியில் வைத்துப் பார்க்கும் போது கண்ணால் காணாத கடவுளின் மேல், எவ்விதப் பிரதிபலனும் கருதாது, கண்மூடித்தனமாக நம்பிக்கை வைப்பது அரிதினும் அரிதான விஷயம்தான்.

அப்படிப்பட்ட பாசப் பிணைப்பு இருப்பவருக்குத்தான் உண்மையான தியானம் எனப்படுவது மிக எளிதில் வந்து சித்திக்கிறது.

தொடரும்...

பசுவின் கன்றுக்குட்டி அம்மா என்று பிரேமையுடன் கூப்பிடுவதைப் பார்த்துத்தான் மனிதர்கள் தாயாரை அம்மா என்று கூப்பிட ஆரம்பித்தார்கள் என்று தோன்றுகிறது. பசுவின் கன்று எவ்வாறு மனம் உருகி அம்மா என்று கதறுகிறதோ, அவ்வாறு உலக மாதாவான அம்பிகையிடம் மனம் கசிந்து உருகிப் பிரார்த்திக்க வேண்டும். அம்பிகையின் அருள் எப்படிப்பட்டவனையும் கைதூக்கி விடும். அவளை பரதேவதை என்று வேதம் கூறுகிறது. தாயாரைத் தெய்வமாக நினை என்று சொல்வதையோ திருப்பி தெய்வத்தைத் தாயாக நினைந்து பக்தி செய்வதுதான் அம்பிகையின் தியானம்.

கா. பெரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானானந்த தரிசனம்

ஆத்மஜோதியின் ஸ்தல யாத்திரை தொடர்ச்சி....

ஹரிதாஸ் சுவாமிகள் என்றொருவரை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். இவரை இவரது பக்தர்கள் குருஜீ! என்றே அழைப்பார்கள். இவரது பக்தர்கள் ஒருவரை ஒருவர் காணும்போது சுட்டுவிரலையும் நடுவிரலையும் விரித்து உயர்த்திக் காண்பித்து ராதே கிருஸ்ணா என்று சொல்வார்கள்.

இவருடைய குருநாதர்தான் திருக்கோவலூர் ஞானானந்த சுவாமிகள் இவர் ஒரு ஞானப்பழம். நன்கு பழுத்த ஞானப்பழம். இவருக்கு நிகர் இவரேதான். இவர் 160 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்தார் என்று இவருடைய பக்தர்கள் கூறுவார்கள்.

நாங்கள் ஆறுபேர் ஒரு மோட்டாரில் சென்றுகொண்டிருந்தோம். வளையாம்பட்டி என்ற கிராமத்தில் பாலயோகி ராமதாசர் என்ற மகான் ஒருவரைத் தரிசித்துச் செல்வதில் சிறிது காலதாமதமாகி விட்டது. ஞானானந்தருடைய ஆச்சிரமத்திற்கு எவ்வித அறிவித்தலுமின்றி அங்குதங்கலாமென்று சென்றோம். வழக்கமாக ஆச்சிரமத்தில் இரவு எட்டு மணிக்கு முன்பே கதவடைத்து விடுவார்கள்.

நாங்களோ வளையாம்பட்டியை விட்டுப் புறப்படும் போதே இரவு எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. அங்கிருந்து ஆச்சிரமம் 20 மைலுக்கு மேலாகும். எங்களுக்கோ ஆச்சிரமச்சட்ட திட்டங்கள் ஒன்றுந் தெரியாது.

ஆச்சிரமத்தில் ஏழு மணி தொடக்கம் சத்சங்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. வழக்கம்போல் எட்டு மணிக்குப் படுக்கைக்கு எழுந்தார்கள். அப்போது சுவாமி அவர்கள் வந்து விடுவார்கள் கொஞ்சம் பொறுங்கள் என்று கூறினார். நாங்கள் சரியாக ஒன்பது மணிக்குத்தான் சென்று சேர்ந்தோம். நாங்கள் மோட்டாரை விட்டு இறங்கிச் செல்வதற்குள் சுவாமி அவர்கள் வந்து விட்டார்கள். நீங்கள் படுக்கைக்குச் செல்லலாம் என்றார்கள். காரியஸ்தர் ஓடிவந்து உங்கள் ஆறுபேருக்குச் சுவாமியின் கட்டளைப்படி படுக்கை ஒழுங்கு செய்துள்ளோம் என்றார். முன்னால் உள்ள கடைக்காரர் ஓடிவந்து யாரோ ஒருவர் வந்து இரவுக்கு ஏழு பேருக்குச் சாப்பாட்டிற்குச் சொல்லிச் சென்றார். அவர்கள் வந்து விட்டார்களா? என்று கேட்டார் யார் சாப்பாட்டுக்குச் சொன்னார் என்று யாருக்குமே தெரியாது கடைக்காரருக்கும் ஆளைத் தெரியாது, ஆச்சிரம வாசிகளையென்றால் கடைக்காரருக்கு நன்கு தெரியும்.

எல்லாம் அற்புத மயமாகவே இருந்தது. படுக்கை ஆறு. சாரதி காரிலேதான் படுப்பார். அவரோடு சேர்த்துச் சாப்பாடு மாத்திரம் ஏழு பேருக்கு. இந்த அற்புதத்தை இன்றும் நினைந்து நினைந்து ஆனந்தப்படுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டு விட்டுப் படுத்து விட்டோம். நான்கு மணிக்கே எழுந்து காலைக் கடமைகளை முடித்துச் சுவாமிகளின் முன்பு அமர்ந்தோம். அன்றலர்ந்த செந்தாமரை போன்ற சுவாமிகளுடைய முகத்தை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டிருந்தாலும் அலுப்புத்தட்டாது. புன்முறுவல் பூத்தவண்ணம் சுவாமிகள் செய்யும் உபதேசம் காதுக்கும் கண்ணுக்கும் இனிமையானவை.

திருக்கோவலூர் பல அற்புதங்களை அடக்கியுள்ளது. தேவாரம் பாடிய மூவரில் இருவர் பிறந்த ஊர். திருக்கோவலூர்க் கண்ணன் கோயில் மிகமிகப் பிரசித்தி பெற்றது. ஆச்சிரமத்திற்குத் தினமும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் அத்தனை பேருக்கும் சுவாமிகள் ஆறுதல் கூறி அனுப்புவார்கள். ஒருமுறை ஆச்சிரமத்தைத் தரிசித்தவர்கள் உள்ளத்தில் சுவாமிகளின் திரு உருவைச் சுமந்து செல்வார்கள். அவர்கள் உள்ளத்தில் சுமந்து கொண்டு வந்த சுமைகளையெல்லாம் சுவாமியின் திருவடிகளில் இறக்கி வைத்தே செல்வார்கள் சுவாமிகளின் உபதேசம் கற்கண்டோ,தேனோ என்று கூறவொண்ணாத வகையில் அற்புதமாக அமைந்திருக்கும். எந்தக் கவலை யுடன் வருபவரும் அமைதி பெற்றுச் செல்வது சுவாமியின் சந்நிதிப் பெருமை யாகும்.

ஹரிதாஸ் சுவாமிகள் தன்னைப் பற்றிச் சொல்லுகையில் தான் ஒரு மண்டு என்றும் அறிவற்றவன் என்றும் சங்கீதம் தெரியாதவன் என்றும் எந்தப் பள்ளிக்கூடத்திலும் அறிவைத் தேடியவன் அல்ல என்றும் இரும்பை பாதரசம் பொன்னாக்குவதுபோல் சுவாமிகள் தன்னைச் சொக்கத் தங்கமாக்கி உள்ளார் என்றும் கூறுவார்.

குருவிலும் உயர்ந்த தெய்வம் வேறில்லை என்பது அவருடைய நம்பிக்கை. கு என்றால் இருட்டு. ரு என்றால் நீக்குபவர். குரு என்றால் அக இருளை நீக்குபவர் என்பது பொருள். புற இருளைச் சூரியன், சந்திரன், அக்கினி என்பன நீக்கும் அக இருளை குரு ஒருவரால்தான் நீக்க முடியும்.

குரு இல்லாவித்தை மேலுமில்லைக் கீழுமில்லை என்பார்கள். அதாவது குரு இல்லாமல் இதற்கு முன்னும் ஒருவரும் மேலோங்கியது இல்லை. இனி மேலும் அப்படி நிகழப் போவதுமில்லை. என்பது கருத்து குரு இல்லாமல் முத்தி கிடையாது என்பது பெரியோருடைய கருத்து.

**"தியான மூலம் குரோர் மூர்த்தி**
**பூஜா மூலம் குரோர்ப் பதம்**
**மந்திர மூலம் குரோர் வாக்கியம்**
**மோட்சா மூலம் குரோர்க் கிருபா"**

அதாவது தியானத்திற்கு மூலம் குருவினுடைய திரு உருவம். இதனைத் திருமூலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்"

என்று குறிப்பிடுவார். பூஜைக்கு மூலம் குருவினது திருவடி. இப்பூஜை திருவடிப்பூஜை என்று அழைக்கப்படும். உலகில் உள்ள ஜீவர்கள் எல்லாம் இறைவனது திருவடியை நோக்கியே யாத்திரை செய்கின்றன. இதனால் எங்கள் எல்லோரையும் திருவடி யாத்திரைக்காரர் என்று அழைப்பர். இதனை உணரும் போது நாங்கள் எல்லோரும் சகோதரர்கள் ஆகிறோம். எல்லோருக்கும் நோக்கம் ஒன்று. எல்லோரும் செல்லும் பாதை ஒன்று. இதை உணர்ந்து விட்டால் உலகில் சண்டை சச்சரவு வேற்றுமைக்கே இடமில்லை. இதனை உணராமையினால் தான் வேற்றுமை பாராட்டுகிறார்கள்.

மந்திரத்திற்கு மூலம் குருவின் உபதேசம் மந்திரம் என்றால் நினைப்பவரைக் காப்பது என்பது பொருள். குருவின் மூலம் உபதேசமாகப் பெறும் மந்திரமே வலுவுடையது. குரு வேறு இறைவன் வேறு அல்ல. அதுபோல குரு உபதேசம் வேறு கடவுள் வேறு அல்ல. எல்லாம் ஒன்றே இறைவன் திருவருளே குருமூர்த்தமாக வருகிறது.

குருவினுடைய கிருபை இல்லாமல் மோட்சம் இல்லை என்பது எப்பவோ முடிந்த முடிவு. முத்தியை இறைவனாலும் கொடுக்க முடியாது. குரு ஒருவரால்தான் கொடுக்க முடியும்.

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.**

என்பது திருமூலர் திருவாக்கு.

நாங்கள் முதன்முதல் வித்தையை ஆரம்பிக்கும் போது "குருப்பிரியா நம" என்றுதான் ஆரம்பிக்கின்றோம் சமயதீட்சை பெறும் போதும் குருவே முன்னிற்கிறார். பிரம்மச்சரிய ஆச்சிரமம் முற்றி கிருகஸ்தாச்சிரமம் புகும் போதும் குருவே முன்னின்று வழிகாட்டுகின்றார். குருவின் தத்துவத்தை எம்மால் வாய்விட்டுச் சொல்ல முடியாது.

எங்கள் எல்லோருக்கும் ஆதி குருவாக உள்ளவர் தட்சிணாமூர்த்தி ஆவார். அவர் தெற்குப் பார்த்த முகத்தோடு இருந்து நால்வருக்கு உபதேசம் செய்தார். நான்கு சீடர்களும் வடக்குப்பார்த்த முகத்தோடிருந்து தட்சிணா மூர்த்தியின் உபதேசத்தைப் பெற்றனர். அதனால்தான் நாம் வடக்குப் பார்த்து கும்பிடுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி ஞானானந்தர் உலகம் முழுவதற்கும் ஞானகுருவாக விளங்கினார். பூத உடலைவிட்டு ஆத்மா மறைந்தாலும் ஹரிதாஸ் சுவாமி களின் நன் முயற்சியால் அவர் கோயிலில் தெய்வமாகி விட்டார். சமாதிகள் வைக்கப்பட்ட கோயில்கள் பிரகாசம் பெற்று விளங்குவதை இன்றும் காண்கிறோம். பழநியின் பிரகாசத்திற்கு முக்கிய காரணம் அங்கு போகருடைய சமாதி இருப்பதுதான்.

குரு ஒருவர் பூத உடலை நீத்தாலும் அவர் சூக்கும உடலில் நின்று அருள் புரிந்துகொண்டிருக்கிறார் என்பதற்கு எத்தனையோ அத்தாட்சிகள் இருக்கின்றன.

**அழுந்தோறும் அணைக்கும் அன்னை**
**அறிவிலாது ஆடி ஓடி**
**விழுந்தோறும் எடுக்கும் அப்பன்**
**விளையாடும்போது தோழன்**
**தொழுந்தோறும் காக்கும் தெய்வம்**
**சொந்தமாய் எடுப்போர்க் கெல்லாம்**
**குழந்தை இப்படி உலாவும்**
**குருநாதன் வாழி வாழி.**

குருநாதன் அன்னையாய், அப்பனாய், தோழனாய், தெய்வமாய், குழந்தையாய் உலாவிடுவான் என்று இப்பாடல் கூறுகின்றது.

குருநாதன் இல்லாவிட்டால் உலகமே இருட்டுக்குள் தான் வாழும். அஞ்ஞான இருளில் இருந்து ஞான ஒளிக்கு வழிகாட்டுவது குருவின் தத்துவமாகும்.

**காயனை அகாயனாக்கி கண்டனை அகண்டனாக்கி**
**பேயனைப் பிரம்மமாக்கி பிறப்பு இறப்பிலாமையாக்கி**
**தாயினும் இனியனாகி தகைந்தெனை அணைந்து ஆண்ட**
**தூயசற் குருவேநின்னைத் தொழுந் தோறும் துலங்குமே.**

ஃஃஃஃஃ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரூராதீனத்தின் இந்துசமயப் பணிகள்

"இன்பமாய தருதிடை ஓங்கவும்
துன்பமாயது தூரத்துள் நீங்கவும்
முன்பராபரன் மொய் குழலோடணைந்து
அன்பின் ஈன்ற ஓர் ஆனையைப் போற்றுவோம்"

உலக சமயங்கள் பலவற்றுள்ளும் நம் நாட்டின் பழம் பெருஞ் சமயமான இந்து சமயம் போற்றத்தக்கதாக விளங்குகிறது. பாரத நாட்டின் சிறந்த சமயச் செந்நெறியே இந்து சமயம். ஆன்றோர்களது ஆய்வின்படி "தொன்மைச் சிவநெறியே" இந்து சமயமாகும்.

'சிவ வழிபாடு' உலக வரலாற்றில் மிகப் பழைமையானது என்பதற்குரிய சான்றுகளை உலகம் முழுவதும் காண முடிகிறது. பல நாடுகளிலும் கண்டங் களிலும் சிவலிங்க உருவங்கள் அமைந்திருப்பதன் மூலம் சிவ வழிபாட்டினை முன்னோர்கள் மிகப்பழங்காலத்தில் செம்மையாகப் போற்றி வந்தனர் என்பதை அறியலாம். மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற இடங்களில் அகழ்வாய்வின் மூலம் சிவலிங்கங்கள் அதிகம் கிடைத்தன என்ற அறிஞர்கள் கூற்றின்படி ஆன்மார்த்த வழிபாட்டிற்கு உரியதாகிய சிறிய சிவலிங்கங்கள் பழமைச் சிவநெறியை நமக்கு விளக்குகின்றன. இச்சிவநெறியே பிற உலக சமயங்கட்கும் ஆதாரமாகும். பிற நாடுகளிலும் இக்கொள்கையை நடைமுறைப்படுத்தி வழிபட்டு வருகின்றனர்.

இந்து சமயம் என்பது அறுவகைச் சமயங்களையும் அதனோடு தொடர்பு உடைய பிற சமயங்களையும் உள்ளடக்கியதாக உள்ளது. இச்சிவநெறி கடல் கோட்கட்கும் முற்பட்ட ஒன்று. இமயம் முதல் ஈழம்வரையுள்ள நாடுகளில் பரந்த சிவநெறியைக் காண்கிறோம். அன்னையின் வழிபாட்டைக் குமரியிலும் அப்பனது வழிபாட்டை இமயத்திலும் காட்டிப் பரந்த சிவநெறியின் சிறப்புக்குப் பல இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

இமயத்திற்கும் குமரிக்கும் இடைப்பட்ட இந்தியாவின் பழம்பெருஞ் சமயம் சைவசமயமாகும். இதனால் சமய நிறுவனங்கள் பல தோன்றின. அருளாளர்கள் மக்களிடையே சமய நெறியைச் சிறப்பாக வளர்த்து அதன் மூலம் வாழ்வாங்கு வாழவழிவகை செய்கின்றனர். இதனால் ஏற்பட்டவையே. "ஆதீனங்கள்" ஆதீனங்களின் பணி சமய உணர்வுக்குத் துணைசெய்கின்றது. இடையிடையே அப்பணிகள் காலச் சூழல் காரணமாகத் தடைப்பட்டன. சென்ற நூற்றாண்டில் பணி செய்த ஆதீனங்கள் திருமடங்கள் பற்பல. 16, 17 ஆம் நூற்றாண்டில் பேரூரில் சாந்தலிங்க அடிகளார் திருமடம் என்ற பெயரோடு விளங்கிச் சிறப்பான பல பணிகளைச் செய்து கொண்டுள்ளது.

இதனைத் தோற்றுவித்தவர் வீரசைவச் சித்தாந்தச் செந்நெறியில் நன்னெறி ஈதென்று உலகுக்கு உணர்த்திய சான்றோரான 'சாந்தலிங்க அடிகளார்' ஆவார். அடிகளார் தமிழகத்தின் பல இடங்களில் சென்று வழிபட்டு அருளாளர் தொடர்பு கொண்டு பல அருட் பணிகளை ஆற்றியுள்ளார். இவர் தம் ஞானாசிரியராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியவர் திருவாவடுதுறை ஆதிகுருவாக விளங்கிய நமச்சிவாயதேசிகரது மாணவர். துறையூர் சிவப்பிரகாசம் ஆவார். அவர் சிவநெறிக்கு ஆற்றிய தொண்டு மிகப்பெரியது. சிறந்த சமயப்பணிகள் பலவற்றைச் செய்தவர். 'திருப்பருப்பதம்' என்று சொல்கின்ற ஸ்ரீசைலம் வரை சென்று பல மடங்களை நிறுவி பல தொண்டர்களை உருவாக்கிச் சமயச் செந்நெறியை வளர்த்திருக்கிறார். அவருடைய முதல் மாணவராக ஞானப் புதல்வராக விளங்கியவர் சாந்தலிங்க அடிகளார். அவர் சமயப் பொறையும் செந்தமிழ் நெறிப்பண்பும் உடையவர். இந்நிலையில் மக்களின் மனதைத் தெளிவுபடுத்தத் தவக்கோலம் பூண்டார்.

**"தேறு நிமித்தம் திருத் தொண்டு செய்பவராய்**
**கூறு மடியார்குழாம் பலவும் கொண்டார்"**

**"சாலக் கருணை தழைத்த குருதாள் பணிந்து**
**கூலப் பொலிவாருங் கொங்குவள நாட்டினிடை"**
**"மேலைச் சிதம்பராம் மிக்க புகழ்ப் பேரூரில்**
***சீலத்தவர் போற்றத் திருமடம் ஒன்று அமைத்தார்"***

என்று தவத்திரு தண்டபாணி சுவாமிகள் போற்றுகின்றார். இத்தகைய பெருமை படைத்தவரால் உருவாக்கப்பட்ட பேரூராதீனம் சிறந்த மாணவர்களை உருவாக்கி அடியார் திருக்கூட்டங்களைப் பெருக்கியது. போரூர், திருமுது, குன்றம் பேரூர் என்ற மூன்று இடங்களில் இவற்றின் பணிகள் சிறப்புப் பெற்றன. சிறந்த மனப்பக்குவம் அமைந்து உலகிற்கு உதவ வாழ்ந்த சாந்தலிங்கப்பெருமானைக் கன்னட நாட்டு மன்னான குமாரதேவர் தமக்குரிய ஞானாசிரியராகக் கொண்டு வாழ்ந்தார். குமாரதேவராகிய மன்னர் சாந்தலிங்க அடிகளார் திருமடத்தில் திருவாயிலை தூய்மைப்படுத்தல் அலகிடல், மெழுகல் போன்ற பணிகளைச் செய்தார். இவரது மனப்பக்குவநெறி உணர்ந்து சாந்தலிக்கப் பெருமான் அருள் மொழியுணர்த்திப் பல தலங்களை வழிபடுமாறு ஆணை வழங்கினார்.

இவர் மகாராஜத்துறவு, சுத்த சாதகம் போன்ற நூல்களை அருளிக் குமாரத் தேவர் என்ற திருப்பெயரோடு பழமலை என்னும் திருமுதுகுன்றத்தில் பெரியநாயகியம்மையாரின் திருவருள் பெற்றுத் திருமடம் அமைத்தார். இவரது மாணாக்கர் போரூர் சிதரம்பர சுவாமிகள் முருகன் அருள் பெற்றவர். குமார தேவரிடம் அவரது பக்குவம் கண்டு சாந்தலிங்க அடிகளார் திருமுன்பிற்கு அழைத்து வந்தார் அடிகளார். எனக்கு நீ ஒருவன் போதும் நீ அவனை ஆட்கொள் என்று கூறினார். சிதம்பர சுவாமிகள் இத்தகைய குருமுதல்வரை பெருந்தவப்பயனால் சாந்தலிங்கப் பெருமான் இயற்றிய வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், கொலைமறுத்தல், அவிரோத, உந்தியார் போன்ற நூல்களுக்கு உரை எழுதினார். இவருடைய உரைகள் அறிஞர் பலரால் பாராட்டிப் போற்றப்படுகின்றன. முருகன் திருவாசகம் என போற்றப்பெறும் திருபோரூர் சன்னிதி முறையைப் பாடினார். போரூர் முருகன் திருக்கோயிலை சிறப்பாக எடுப்பித்து அங்கு திருமடம் அமைத்து வாழ்ந்தார்.

பேரூராதீனம் தம் மாணவர்களை உருவாக்கி பல அருள் நூல்களையும் பரப்பியது. இத்தகைய அருள் நூல்கள் இந்து சமயத்திற்குப் பெரிதும் துணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிவன. மற்ற சமயங்களைப் புறக்கணிக்காமல் ஏற்றுக்கொண்ட ஒருமைப்பாட்டை இந்து சமயத்தில் காணலாம்.

அவ்வாறு காட்டிய அருளாளர்களும் உள்ளனர். இவ்வகையில் சாந்தலிங்கப் பெருமானுடைய நூல்கள் சமயச் செந்நெறியால் பிணக்குக் கொள்ளாமல் உண்மை உணர அமைந்தது ஆகும். சாந்தலிங்கப் பெருமான் சமயக் கொள்கைகளை உள்ளவாறு உணர்ந்தவர்.

நாம் மாநாடு பல கூட்டி நமது சமுதாயத்திற்குரிய பல கருத்துக்களைக் கூறி வருகின்றோம். ஆனால் அன்றே அத்தகைய பேரவை கூட்டிச் சமயத்தைப் பரப்பும் பாங்கினை அருளியவர் எமது ஆதி குருமுதல்வர். சிறந்த புலமையும் அறிவாற்றலும் மக்களை ஈர்க்கும் பண்பும் உலகவாழ்வின் தன்மையை உள்ளவாறே உணர்த்தும் திறனும் கொண்ட வாய்மைச் சீலர். உலக வாழ்வு பற்றிக் கேட்போருக்கு விளக்கம் கூறி பிறர் கருத்துக்களை மறுத்து தன் கருத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில் நிலை நாட்டினார் என்பதை அவருடைய பாடல்களின் மூலம் அறியலாம்.

அவருடைய 'கொலை மறுத்தல்' என்ற நூல் அன்பின் பெருமை பற்றிக் கூறுவது அதாவது 'அன்பின் வழியது உயிர்நிலை, 'அன்பே சிவம்', 'அன்பும் சிவமும் இரண்டன்று', 'அன்பின் வடிவம் சிவம்', 'அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை', என்னும் அடிப்படையில் 'உயிர்கட்கு அருளல்', 'உயிர்கட்கு இரங்கல்' போன்ற வழிகளைக் கூறுகிறது. பல்வேறு சமயத்தவர் கருத்துக்களை மறுத்து எடுத்துக்காட்டும் இடங்களில் இந்து சமயக் கொள்கையை நிலைநாட்டியுள்ளார்.

**"எவ்வ துறைவ துலகம் உலகத்தோ**
**டவ்வ துறைவ தறிவு"**

என்று உலகினைரைப் பற்றி வள்ளுவம் போற்றுகிறது. உலகத்தோடு ஒட்ட ஒழுகும் அறிவுடையவர்களை வாழ்வியல் உண்மைகளை உணர்ந்து கொள்பவரை, ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களை உலகத்தோர் என்று பேசுகிறது வள்ளுவம். இத்தகையோர் சேர்ந்துள்ளமையால் உயர்ந்த சமயமாகச் சாந்தலிங்கம் சிவநெறியைக் கூறுகிறார்.

குளிர்ந்த தண்ணிய நிலவு போன்று இந்து சமயக் கோட்பாடுடைய சைவர் காட்டுபவராக விளங்குபவர் தன்னைப் பக்குவப்படுத்திக் கொள்ள நினைக்கும் ஒருவருக்குக் கூறுவதாக அமைந்தது இப்பாடல்.

**"எடுத்துள எச்சமயிகளு முலகருஞ்சார்**
**ஓரவை யினிடை யிற் றோன்றும்**
**உடுத்தனைச் சூழ் தர விளங்கும் மதியின் உயர்**
**சைவரை வந்து ஒருவன் தாழ்ந்தீண்டு**
**அடுத்த பல உயிர்த் தோற்றத்து உயர்வுதாழ்வு**
**அருளுக என அவனைத் தோற்றித்**
**தடுத்த புறச் சமயிகளுக்கு உத்தரம் உறுத்தி**
**நிறுத்துகின்றார் தம்பாலூற்றம்."**

சமயத் தலைவர்களிடத்திலே பெற்ற விளக்கங்களைவிடச் சாந்தலிங்க அடிகளார் தன் கருத்து சிறந்த கருத்து எனவும் எல்லோராலும் ஏற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படக்கூடிய கருத்து என்றும் விளக்கம் செய்கிறார். எனவே பிறர் கூறும் தடைகளை நீக்கி விடைகூறி இதுவே முடிவு என விளக்குகிறார்.

'வைராக்கிய சதகம்' என்ற நூல் மனம் நிலைபெறப் பல காரணங்களைக் கூறுகிறது வள்ளுவம்.

**"தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது"**

என்று பேசியதோ அதுபோல இறைவன் திருவடிவணங்கி அருளாளர்களது பாடல்களைப் பாடி வழிபட்டால் வழிபாட்டுக்கிரங்கி இறைவன் அருள் புரிவான் என்று காட்டுகிறது.

**"வாழி நெஞ்சமே சென்றிடேல்**
**நின்றி தோர் வார்த்தையுரை செய்வாய்"**

என்று நெஞ்சத்தை ஒருமுகப்படுத்தும் நிலை பேசப்படுகிறது. பெரியோர்களது அருளாளர்களது பாடல்களை ஓதுவதால் சிறந்த பயன் கிட்டும் என்றும் அப்பாடல்களை ஓதி, ஓதி நெக்கு நெக்கு உருகினால் சிவபெருமான் அருள் புரிவார் என்பதை இறைவன் குருவாய் வந்து அருள் செய்தான் என்பதை,

**"விளம்பற்கரும் சோதியென்கோ விடையோன் என்கோ என்**
**னுளம் புக்க சிவப்பிரகாசன் என்கோ என் அங்கைத்**
**தளம் பெற்றசாந்தன் என்கோ நின்றனது நாமம்**
**வளம்பெற்ற திருக்கைலாய சொல்வாய் நினக்கே"**

எனக்கூறும் அருட்பாக்களால் விளக்கியுள்ளார்.

'வைராக்கிய தீபம்' என்ற நூலில் சிறிய அளவில் உள்ள மருந்து உடலுள் சென்றவுடன் நோயை அகற்றுவது போல் ஞானாசிரியரது அருள் நிறைந்த ஒரு சொல் நமக்கு உறுதியைத் தந்து பிறவாப் பிணிகளைப் போக்கி சிறந்த உள்ளுணர்வைப் பெற்றுக்கொண்டு வளர்கின்ற வளர்ச்சிக்குரியதாக அமைகிறது என்பதை,

**அருந்திய காலத் தற்பமாய்பின்பேர் அவுடதம் உடம்பினின்றுடலை**
**வருந்திய பிணியெல்லாம் அகற்றுதல்போல் வஞ்சனேன் நெஞ்சில் மாற்றரிதாய்**
**இருந்த எப்பற்றும் பிற்றை நாள்களில் விட்டேக அன்றே**
**கடைக்கணித்தல் புரிந்த தம் குரவன்.**

அருளிருந்தமை எப்பொழுதும் உள் நினைத்து வாழ்ந்திடுவோம் என்று பேசுகிறது. உலக வாழ்க்கை அழிவுடையது. மறைகளின் கருத்து அதுதான். திருவள்ளுவர் தமிழால் நமக்கு அருளப்பட்ட வேதம் திருக்குறள் என்று கூறுகிறது. அருளாளர்களின் சொல்லை ஏற்று நடக்கவேண்டும். நிலையான வாழ்வை அடைய முயலவேண்டும் என்றும் மேலான நெறிகளைப் பின்பற்றல் வேண்டும் என்றும் காட்டுகிறது இந்நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிரோத உந்தியாரில் விரோத மனப்பான்மையைவிட்டு ஒற்றுமை மனப்பான்மையோடு வாழ்தல் உயர்வுடையது என்ற இந்து சமயக் கோட்பாட்டைக் கூறும் வீடுபேறு அடைதற்குரிய வழிகளையும் கூறுகின்றார். தத்துவக் கோட்பாடு களையும் விளக்குகிறது இந்நூல்.

**"எல்லாம் உடையான் குருவாகி ஈங்கெமது**
**அல்லல் அறுத்தான் என்று உந்தீபற**
**அவன் தாள் தொழுவோம் என்றுந் தீபற"**

என்று தொடங்கும் அருமையான இந்நூல்

**"எம்மதத்தோர் எவ்வகை நிட்டை சொல்லினும்**
**சம்மதமே யெமக்குந்தீபற**
**தற்போத மாய்க்கு மேல்உந்தீபற"**

எனப் பொதுநிலை கூறி வீட்டு நெறி அடைய உலகியல் நன்னெறிகளை உள்ளவாறு உணர்ந்து செல்வதுதான் சிறந்த நெறி என்று காட்டுகிறது.

**தவிரா விரோத சமயநூல் என்றால்**
**அவிரா அவிரோத உந்தி என்றுந்தீபற**
**ஆமிந் நூல் நாமம் என்றுந்தீபற.** என்று கூறுகிறார்.

எனவே இத்தகைய சிறந்த அருள் நூல்கள் மூலம் சமய உண்மையை விளக்கிய சாந்தலிங்கப் பெருமானால் தோற்றுவித்த இப்பேரூராதீனம் இந்து சமயக் கோட்பாடுகளைப் பல நூற்றாண்டுகளாக விளக்க விரும் சிறந்த நிறுவனமாக விளங்குகிறது. அருளாளர்கள் கொங்கு நாட்டின் பல பகுதிகட்கும் சென்று பாரத நாட்டின் சிவநெறியும் சமயப்பண்பும் மக்களிடையே வளர்க்கத் தலையிட்டனர். அவற்றை அறிந்து கொள்ளவும் வாய்ப்புக்களை பெருக்கியுள்ளனர். சாந்தலிங்க அடிகளார் காட்டும் அருள் வழியில் இலங்கும் இவ்வாதீனம் 1916 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சத்வித்யா சன்மார்க்க சங்கம் தொடங்கி பல சமய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியும் சிறந்த கருத்தரங்குகளை நடத்தியும் வருகின்றது. சாந்தலிங்க அடிகளாரின் குருபூசை ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வமயம் அறிஞர்களை ஈடுபடச் செய்து தத்துவக் கோட்பாடுகளை வளர்க்க அரிய சொற்பொழிவாற்றல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டு வருகின்றன.

நாடு முழுவதும் சென்று மக்களோடு அணுகி சமய நெறியால் வாழ்வதற்கு உரிய வழிகளை அறநெறிகளை உணர்த்தி நல்லுணர்வு ஊட்டுகின்றனர். தமிழ் நெறியில் திருமுறைகளின் துணை கொண்டு திருக்கோயில் வழிபாடு நடைபெற சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சிறந்த தமிழறிவும் சமய உணர்வும் ஏற்படும் வகையில் கோயில் புதுப்பித்தல் திருமுழுக்கு நீராட்டு இவற்றிற்குத் தலைவர்களும் தொண்டர்களும் தாமே முன்நின்று செய்து மக்களுக்குப் பக்தி உணர்வு, பண்புகள் ஆகியவற்றை வளர்க்கின்றனர். நூற்றுக்கு மேற்பட்ட திருக்குட நீராட்டு நிகழ்ச்சிகள் தெய்வத் தமிழ்நெறியால் நிகழ்ந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் உள்ளத்தில் உயர் கல்வி புகட்டல், சிறந்த இலக்கண இலக்கியங்களை மக்களுக்குப் பரப்பல், சொல்லேர் உழவர்களை உருவாக்கல் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை சமய வழியில் உருவாக்கல் ஆகியன இவ்வாதீனத்தின் பணிகளாகும். ஆதீனத்தின் சார்பில் பல நிறுவனங்கள் சமய ஒழுகலாறுகளை விளக்கிக் கூறியும் குங்குமம், திருநீறு போன்ற இறைவனின் பிரசாதங்களை வழங்கியும் மன அமைதி பெறப் பணி புரிகிறது.

இவ்வாதீனம் மேலும் "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்ற வகையில் எல்லோருக்கும் அருள் நெறியை உணர்த்தி வழிகாட்டுகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற நிலையில் தமிழகத்திலுள்ள அனைத்துச் சமய நிறுவனத்தோடும் தொடர்பு கொண்டு அவர்களது கருத்துக்களில் ஏற்பன ஏற்றுப்பணி புரிகிறது. பல சமய அறிஞர்களைக் கொண்டு ஆய்வுரைகளையும் கருத்தரங்கு களையும் வழங்கி சமயக் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன.

பழுதற்ற கோயில்கள், வரலாற்று சிறப்புமிக்க தலங்கள் ஆகிய செப்பனிடல் கோடைகால வகுப்புக்களை நடத்தி தமிழுணர்வும் சமய அறிவும் வழங்குதல் ஆகிய பல வகைகளில் ஈடுபாடு கொண்டுள்ளது. வேறுபாடு காட்டாத திருமுறை நெறியில் சிவனை வழிபடுபவர் அனைவரும் தம் உறவுக்கு உடையவர் என்ற நிலையினை மேற்கொண்டு திருமூலர் நெறியில் நின்று சமய ஒழுகலாறுகளைப் பின்பற்றச் செய்கிறது இவ்வாதீனம்.

தொண்டுக்கும் தூய அன்புக்கும் முதலிடம் தந்து விழா நடத்தி, அன்பர் கூட்டமாகிய மக்கட் செல்வத்தை அதிகம் பெற்று இந்துசமயக் கோட்பாடுகளின் தூயதாகி சிவநெறியைக் கடைப்பிடித்து வீரசைவ நெறியை உலகறியச் செய்யும் நடைமுறையைக் கொண்டது இவ்வாதீனம். தற்போது சமயத் தத்துவ ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றைத் தொடங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆகம நெறியை உள்ளவாறு அறிந்து கொள்ளும் வகையில் ஆய்வுகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அரிய இலக்கியங்கள் ஓலைச்சுவடிகள் தொல்பொருள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளன.

**"என்கடன் பணி செய்து கிடப்பதே**
**தன்கடன் அடியாரையும் தாங்குதல்"**

என்று

**"தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"**

என்றும் பாடிய அப்பர் அடிகளின் உயர் குறிக்கோளுக்கேற்ப நடைபெற்று வருகிறது. இவ்வாதீனம் திருமூலரும் மணிவாசகரும் அருளும் மெய்ப்பொருளியலை மேற்கொண்டு அங்கலிங்க வழிபாட்டை நடைமுறைப்படுத்தும் வீரசைவத் தொன்னெறியில் செயலாற்றுகிறது.

**வளர்க சிவ நெறி!**
**வாழ்க வையகம்!**

**இனிய சாறின்றி பழமும், பழமின்றி மரமும்,**
**வாசமில்லா மலரும் - போன்றது**
**அன்பில்லாத இதயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திர ஜபம் செய்யுங்கள்

பிரபஞ்சம் முழுவதும் பரவிக்கிடக்கின்ற ஒலி அலைகள்

நம்முடைய உலகத்தைச் சுற்றி இடையறாது நகர்ந்துகொண்டு இருக்கிறன. நம் பெரியவர்கள் இந்த ஒலியலைகளை உற்றுக் கவனித்து கிரஹித்து தம் சூட்சும சக்தியால் உற்றுக்கவனித்து வார்த்தைகளாக்கி வரிசைப்படுத்தி அதை மந்திரம் என்றனர்.

ஒரு குறிப்பிட்ட அளவு வேகத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு ஒலியைச் செலுத்தினால் அந்த ஒலி எதிரே இருக்கின்ற கண்ணாடியை மட்டுமல்ல இரும்புக் கோட்டைகளைக் கூட தகர்த்துவிடும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

வெறும் தளர்வாக அகலமாக பரவிக்கிடக்கின்ற ஒலி அலைகள் மாற்றப்பட்டு ஆயுதமாக பிரயோகிக்கப்படுகிறது. இதுதான் மந்திரத்தின் தாற்பரியம் ஆகும்.

- ♦ கோபம் உள்ளவனை சாந்தம் உள்ளவனாகவும்
- ♦ காமுகனை ஒழுக்கமானவனாகவும்
- ♦ கெட்ட பழக்கங்களில் சமபலமுள்ளவனை வைராக்கியமுள்ள வனாகவும்
- ♦ சோம்பேறியை சுறுசுறுப்பானவனாகவும்
- ♦ மாற்றும் சக்தி மந்திர அதிர்வலைக்கு (Vibration) உண்டு.

நம் மூளையின் முழுச் சக்தியையும் நாம் எப்போதும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டதில்லை. ஆயிரத்தில் ஒருவரே சற்று அதிகமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

மூளையை அதிகளவு பயன்படுத்தாதவர்கள்

1. ஆத்திரக்காரர்களாக
2. அவசரப்படுபவர்களாக
3. ஆராய்ந்து பார்க்க முடியாதவர்களாக
4. ஞாபகசக்தி இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.

ஞாபகசக்தி தெளிவாக இருப்பின் ஓர் அனுபவத்தினுடைய மகிமை முழுவதுமாக இருக்கும். ஆனால் பலபேருக்கு ஞாபகசக்தி அழுத்தமாக இல்லாததால்தான் ஒருமுறை சண்டைபோட்டு பட்ட அவமானங்களையும் வலியையும் மறந்து புதியதாகச் சண்டையைத் தொடக்கி விடுகிறார்கள். போன முறை சண்டை போட்டது தெளிவாக இருப்பின் முற்றிலும் சண்டையைத் தவிர்த்து விடுவோம். அல்லது சண்டை போட்டு வெற்றி காண்பதற்கான புது வழிமுறைகளை அறிந்திடுவோம். இரண்டுமற்று குருட்டாம் போக்கில் சண்டைபோடுபவன் ஞாபக சக்தி இல்லாதவன் அல்லது மூளை பலம் இல்லாதவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி மேற்சொன்ன ஞாபகத்திறனுக்கு மட்டுமல்ல ஏன் வார்த்தைகளால் விவரிக்க இயலாத ஆன்மீக முன்னேற்றம் கூட இடைவிடாத மந்திர ஜபத்தால் ஏற்படலாம். அதாவது மூலாதார சக்தி விழித்துக்கொள்ளலாம். இந்தச் சக்தி எழும்புதல் தன்னை ஏதோ ஒரு வழியில் வெளிப்படுத்தவே செய்யும்.

இங்கு வெளிப்பாடு என்பது நல்ல கலைஞனாக,அறிவாளியாக, பேச்சாளனாக, எழுத்தாளனாக, நிபுணத்துவம் மிகுந்தவனாக உருவாதல் என்பதேயாகும்.

எனவே மந்திர ஜபம் செய்வது நல்லது. மந்திர ஜபத்தை இடையறாது நாக்கசைக்காது உதட்டசைக்காது, மனதுக்குள்ளேயே திரும்பத் திரும்பச் சொல்லிவர இதுவே மிகப் பெரிய நற்பலனைக் கொடுக்கும்.

வாய்திறந்து சொன்னால் சில நேரங்களில் ஏற்பட்டுவிடக்கூடும். அதுமட்டுமன்றி சொல்லப்படும் மந்திரத்தின் ஒலி காதுகளுக்கு எட்டாமல் வேகமாய் போய்விடக் கூடும். மனதுக்குள் சொல்லும் ஒலி கூர்மையானது, வேகமானது.

மெல்லிய அளவில் நிதானமாய் சீராய் ஒரு மந்திரம் சொல்லி குட்டிக்கொள்ள உச்சந்தலை நாடி விழிப்படைந்து நுரையீரல்,விழிப்படைந்து, வாழ்க்கை மொத்தமும் வேறுவிதமாய் மாறிப்போகும். கோபம் வரும்போதே அதை உற்றுக் கவனிக்கிற நிதானம் ஏற்படும். சந்தோசம் ஏற்படுகிறபொழுது தலைகால் புரியாமல் ஆடாமலிருக்க ஓர் அமைதி உள்ளுக்குள் உருவாகும். ஏனெனில் புத்தி இந்த ஆட்டத்தையெல்லாம் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கின்ற பக்குவத்தைக் கொண்டுவந்து விடும். இதற்குக் காரணம் மந்திர ஜபம் ஆகும்.

மந்திர ஜபம் என்பது ஒரே ஒரு வாக்கியத்தின் மீதோ மிகுந்த புனித சக்தி படைத்த வார்த்தையின் மீதோ இடையறாது சுழன்று கொண்டு இருப்பதாகும். பழக்கப்படாத மனம் ஆரம்பத்தில் தாறுமாறாய் அலைந்தாலும் பின்னர் மந்திர ஜபத்திலிருந்தே ஆனந்தமாகிப்போகும். மந்திரம் உள்ளே இருந்தால் வார்த்தைகள் சத்திய ரூபமாய் வெளிவரும். இறைவனை உணர உதவும் சாதனங்களான பக்தி பிரார்த்தனை போன்றவற்றின் மற்றொரு வளர்ச்சி நிலைதான் மந்திர ஜபம்.

மனதால் பக்தியுடன் பாராயனம் செய்பவர்களை எது காப்பாற்றுகிறதோ அதுவே மந்திரமாகும்.

எனவே தங்கள் வீட்டுப் பூஜை அறையில் இறைவன் இறைவி திருவுருவப் படங்களுக்கு முன்னர் நெய்தீபம் ஏற்றிவைத்து அனுதினம் பிரம்ம மூகூர்த்த காலத்தில்

**ஓம் நமசிவாய என்னும் பஞ்சாட்சர சிவ மந்திரத்தையும்**
**ஓம் அருளம்பல வரப்பிரம்மமே நம**

என்ற மௌனகுரு மந்திரத்தையும் பக்தி பூர்வமாகச் சொல்லி வாருங்கள். பின் அதனால் விளையும் நற்பலன்கள் தங்களையும் குடும்பத்தினரையும் கவசம் போல் காத்து நிற்கும்.

**குருவே சரணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் அறிந்திருக்க வேண்டியவை...

01. **இரவில் படுக்கப்போகும் முன் திருநீறு பூசிக்கொள்ளலாமா?**

கெட்ட கனவு வராமல் இருக்க! பூசிக்கொள்ளலாம்.

02. **ஆதிசங்கரரால் தோற்றுவிக்கப்பட்ட ஷண் மதங்கள் யாவை! அவற்றின் நோக்கங்கள் என்ன?**

அந்த நாளில் ஆறு மதங்களின் கோட்பாடுகள் ஏற்கனவே பரவலாக இருந்து வந்தன. அவற்றை ஆதிசங்கரர் தொகுத்து ஆறு சிந்தாந்தங் களாக வகுத்தார்.

சைவம் - சிவனையும்
வைணவம் - விஷ்ணுவையும்
சாக்தம் - சக்தியையும்
சௌரம் - சூரியனையும்
காணாபத்தியம் - கணபதியையும்
கௌமாரம் - முருகனையும்
முக்கிய தெய்வங்களாக வணங்குகின்றன. தத்துவங்களிலும் பலவித்தியாசங்கள் உண்டு.

03. **மகா பாவங்கள் எவை என்று சொல்ல முடியுமா?**

பலர் பல விதங்களில் சொல்வார்கள். பாம்பன் சுவாமிகள் எழுதிய ஆனந்த முடிவில் உள்ளதைத் தருகின்றேன். அன்னம் கொடுத்தவர் கண்முன்னால் அவரை நோகச் செய்வது, விஷம் இட்டுக் கொலை புரிவது, கடவுள் திருவடிகளை அகந்தையில் மறப்பது, தன்னையே பெரியவன் என்று சொல்லித் திரிவது. அவையில் வழக்கை வஞ்சக மாகத் தீர்ப்பது. பொய்ச்சத்தியம் செய்வது. மனம், வாக்கு, காயம் இவற்றில் சுத்தம் இல்லாமல் மந்திரம் செபிப்பது. இவற்றையெல்லாம் மகாபாவக் கணக்கில் சேர்க்கிறார்.

நீ யாரென்று உணர்ந்துகொள்ளாமல் உலகில் பிறந்து என்ன பலன்? நிரந்தரமற்றவர்களுக்காக அழுகிறாய். இந்த உலகில் நிரந்தரமான ஆனந்தத்தைத் தரும் கடவுளைப் பற்றி நினைத்துப் பார்ப்பது கூட இல்லை. அப்படி இருக்க வெற்றுப் புலம்பல் ஏனோ? எப்போதெல்லாம் உன் நம்பிக்கை என் அன்பைச் சந்திக்கிறதோ அப்போதெல்லாம் அங்கே துயரம் விலகுகிறது.

**ச.சா.பாபா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றைய யாழ்ப்பாணம்

இந்தியத்தைக் கடைந்ததன் சாரம்
தமிழின் உயர் செம்மைச் சால்பின் பிம்பம்
மேற்குலகின் நவீன சிந்தையும் செயலாட்சியும்
திரண்டதன் உருவே யாழ்ப்பாணம்.

சொல்வது யார்க்கும் எளிது
செயல் யார்க்கும் அரிது
தனியன் சொல்லும் செயலும் ஒன்றி வாழ்வது எளிது
சமூகம் சொல்லும் செயலும் ஒன்றிவாழ்வது அரிது
சொல்லும் செயலும் ஒன்றானது யாழ்ப்பாணம்.

சக்தி வெளிப்பாடு பல்வகை
சக்தி வெளிப்பாடு அழிவு
சக்தி வெளிப்பாடு ஆக்கம்
சக்தி வெளிப்பாடு நிலையம் யாழ்ப்பாணம்

காலத்தின் செயற்பாடு மாற்றம்
காலத்தின் செயற்பாடு ஆக்கம்
காலத்தின் செயற்பாடு ஏற்றம்
காலத்தில் செயற்பாட்டின் கூடம் யாழ்ப்பாணம்

சிறியவை எல்லாம் சிறியன அல்ல
பெரியவை எல்லாம் பெரியன அல்ல
சிறிது பெரியது ஒப்புச் சொல்
சிந்தையும் செயலும் மேன்மையின் சுட்டு
செயலே மேன்மையின் அளவு

உயர்ந்தோர் மாட்டே உலகம்
உயர்ந்தோர் காலம் தேசம் கடந்தோர்
உயர் பொருள் தேடுவர் சான்றோர்
உயர் பொருள் கொண்டது யாழ்ப்பாணம்.

தத்துவமாய் வாழ்ந்தார் பெரியோர் - உலக
தத்துவ இலக்கணம் இருடிகள் முனிவோர்
தத்துவ நூல்கள் சுட்டும் இலட்சியம்
தத்துவ வாழ்வு வாழ்ந்தது யாழ்ப்பாணம்.

அருணாசலத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூரளை ஸ்ரீ இலங்காதீஸ்வரர்

- வே.சதாசிவம் - B.A.M. Litt.Dip. C.E.S (முன்னாள் உதவிப் பரீட்சை ஆணையாளர்)

குழந்தைப் பருவத்திலே ஞானப்பாலுண்ட சம்பந்தர் தென் இந்திய இராமேஸ்வரத்திலிருந்தே திருக்கோணேஸ்வரத்திற்கும் திருக்கேதீஸ்வரத்திற்கும் பாடல் வழங்கி ஈழத்தைப் பெருமைப்படுத்தினார். இந்நிகழ்ச்சி 1300 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது. இளமைப் பருவத்திலேயே சிவ அருள் பெற்ற சிவபாலயோகியர் நம்மிடையே வந்து கிடைத்தற்கரியதொரு சுயம்புலிங்கம் தந்து அதற்குக் கோயில் எழுப்பச் செய்து பிரதிஷ்டையும் செய்து லங்காதீஸ்வரம் எனப் பெயருமிட்டு நம்மைக் கௌரவித்தனர். இந்நிகழ்ச்சி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்தது. அன்று ஞானத்துடன் சம்பந்தப்பட்ட சம்பந்தரும், இன்று யோகத்துடன் சம்பந்தப்பட்ட சிவபாலரும் தந்தைக்குத் தனயராகவுள்ள பெயர்ப் பொருத்தம் சிந்தித்துத் தெளிதற்குரியது.

இதுவரை, வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களிலுள்ள கடலோரங் களிலும் வயற்பிரதேசங்களிலும் கோயில் கொண்ட தெய்வம் இப்பொழுது அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக இலங்காதீஸ்வரர் என்ற பொதுப் பெயர் பொருத்தத்துடன் தமது அருள் ஆட்சிப் பரப்பினை மஞ்சுதோய் மத்திய மலைப் பிரதேசத்திற்கும் விஸ்தரித்து இதுவரை மலையக மக்களுக்கு சிவத்தலமில்லாத ஒரு பெருங்குறையை நீக்கியிருக்கிறது. 16.10.1978 இல் எழுந்த இச்சிவத்தலம் ஏனைய சிவத்தலங்கள் போல எதிர்காலத்தில் பேரும் புகழும் வாய்ந்த மாபெரும் ஸ்தலமாகப் பொலிவுறும் என்பதற்குத் தக்க அறிகுறிகள் காணப்படுகின்றன.

இக்கோயில் தோன்றியுள்ள இடம் ஸ்ரீநகர் என்ற புனித ஸ்தலம். இலங்கையை ஆண்ட சிவபக்தனான இராவணனின் மகன் "வில்லாளனார்க் கெல்லாம் மேலவனான" மேகநாதன் தனது தந்தையின் ஞாபகார்த்தமாகவும் அவரின் நற்கதிக்காகவும் இதே இடத்தில் இதே போன்றதொரு சுயம்புலிங்கம் வைத்து வழிபட்டதாகவும், மேகநாதனின் வழிபாட்டினால் பிரம்மா, விஷ்ணு, இந்திரன், வர்ணன் ஆகியோர் இவ்விடத்தை ஆசீர்வதித்துக் காத்தனர் எனவும், இவ்விடம் இன்றும் காக்கப்படுகிறதெனவும் நூரளையில் நிலவும் ஓர் ஐதீகம் கூறுகிறது. திரிகால உணவுத் தவமுனிவரான ஸ்ரீ சிவபால யோகிகள் இக்கோயிலைத் தாபித்த பொழுது இலங்கை வானொலிக்கு விடுத்த செய்தியில் இவ்வைதீகம் மெய்யானதென உறுதிப்படுத்தி உள்ளார்கள். அன்று தொடக்கம் இன்றுவரை புனித ஸ்தலமாகவே இருந்த இச்சான்று போக, வேறொருவாறான விளக்கமும் இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. "கொல் புலித்தோல் நல்லாடை கட்டிய சிவன் சுடுகாட்டைக் கோயிலாகக் கொண்டவன். பேயோடாடியவன். அவன் அணியும் நீறு காடுடைய சுடலையிலுள்ள பொடி" என நாம் அறிந்ததற்கேற்ப அன்று சுடுகாடாக இருந்த இன்றைய ஸ்ரீ நகர் சிவன் தாண்டவம் ஆடும் களமாகவே இருந்து வந்துள்ளது. இப்புனித இடத்தில் தனிப்பட்ட மனிதர் குடியேறி வாழ்ந்ததேயில்லை. வாழ முடிவதுமில்லை. தூய்மை கருதி வாழ முடியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதகணங்கள் தடுத்துக்கொண்டிருந்தன. 1975ம் ஆண்டில் அருள்திரு.முருகேசு குடியேறியதும், உரியவர் வரும்வரை தூய்மை காக்கப்பட்டது போல மனித சஞ்சாரத்திற்கேற்பட்ட இடர்கள், தடைகள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் அகன்றன. தொடர்ந்து செப்டம்பர் 1978ம் ஆண்டு ஸ்ரீ இலங்காதீஸ்வரர் கோயிலும் இப்புனித இடத்தில் ஆரம்பமாயிற்று. தெய்வ அருளினால் விளைந்த சுயம்புலிங்கம் எமக்குக் கிடைத்தது, தெய்வ வடிவாக வந்த சிவபால யோகியரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது, புனிதமான ஸ்ரீ நகர் தேர்ந்தெடுக்கப்பட்டது, தவ வலிமை பெற்ற அருள்திரு. முருகேசு அவர்கள் ஸ்ரீ நகரில் குடியேறியது, இவை யாவும் திட்டமிட்டுச் செயற்படுத்தும் எமையாளும் ஈசன் செயலாகத்தான் இருக்க முடியும்.

இவற்றுக்கேற்றவாறு தெய்வீக நிகழ்ச்சிகளும் ஸ்ரீ நகரில் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. தெய்வத்தின் கருணை வலுவில் நம்பாத மக்களையும் நம்பவைக்கும் அற்புதங்களும் இங்கு நடைபெறாமலில்லை. லிங்கப் பிரதிஷ்டை செய்த அதே நேரம் ஒவ்வொருநாளும் 12 மணி பூஜை நடைபெறும் பொழுது வரட்சி வெய்யிலிலும் மழை கொட்டுவது போன்ற ஓர் அற்புதமான சத்தம் கூரையின் மேல் இரண்டு நிமிடங்களுக்குக் கேட்கிறது. பளிங்கு போன்ற லிங்க மேனியிலிருந்து வேர்வைத் துளிகள் வழிந்து கொண்டிருக்கின்றன. பிரதிஷ்டை செய்த நாட்களிலிருந்து இதுவரை நம்பத்தக்க அளவு ஓர் அங்குல வளர்ச்சியும் லிங்கம் அடைந்துள்ளது. தெய்வம் நடமாடுகின்ற ஓர் உணர்வு அங்கு திரளும் மக்களுக்கு நாளடைவில் வலுப்பெறுகிறது.

இப்புனித நகருக்கு அணித்தாய் மூன்று மைல் தொலைவில் உள்ளது சீதாஎலியா. இது ராமாயணக் கதாநாயகி சீதாப் பிராட்டி இருந்த அசோகவனம் எனக் கருதப்படுகிறது. அநுமன் கண்ட அசோகவனம் என்பதற்கு ஆதாரமாக அசோகமரங்கள் காலத்திற்கேற்ப அழகுறு பூந்துணர்களுடன் காணப்படுவன. ஞாபகார்த்த கோயிலாக சீதையம்மன் கோயிலும் இங்குள்ளது. இதனருகில் இருமருங்கிலும் மலிந்து உயர்ந்து நிற்கின்ற அசோகமரங்களைக் கொண்டதும் வற்றா ஊற்றினைக் கொண்டதுமான ஓர் அருவி பாய்கிறது. பரந்துபட்ட பெருமலைச்சோலைகளும், குன்றுகளும் சூழ்ந்த இம்மலைப் பிரதேசம் இராம, இராவண இராமாயணக் காட்சிகளைக் காட்டுவது போலுள்ளன.

உள்ளங் கிளர்ந்து மெய்மறக்க வைக்கும் ஹனுமானின் சஞ்சீவி மலையெனப்படும் உயர் குன்றுக்குப் பக்கத்திலுள்ள பெயர்பெற்ற ஹக்கலைப் பூங்கா இதற்கு நாலு மைல் தொலைவில் உள்ளது. 7000 அடி உயரத்திற்கு மேலுள்ள இந்த மலைப் பிரதேசத்தில் நாள் முழுவதும் பனி பெய்வது போன்ற (குட்டி இங்கிலாந்துக்) கால நிலையுள்ளது. நறுமலர்கள் அன்றலர்ந்த பனிமலர்களாகவே நாள் முழுவதும் காணப்படுவன. இப்பனிமலர்கள் **"பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தியப் பனி மலரெடுக்க மனமும் நண்ணேன்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற தாயுமானாரின் பாடலை உணர்த்தி அத்தெய்வ மலர்களைப் பறிக்கவொண்ணாது தடுக்கும் ஒரு மனநிலையை ஏற்படுத்துகிறது.

இராவணன் வழிவந்த மேகநாதனால் புனிதமாக்கப்பட்ட ஸ்ரீ நகரில் ஓர் இலங்காதீஸ்வரர் : இராவணனால் இடம்பெயர்ந்த சீதையின் விரத பிரார்த்தனைகளால் புனிதமாக்கப்பட்ட சீதா எலியாவிலுள்ள சீதையம்மன் கோயில், மக்களுள் மறைந்துள்ள தெய்வீகத்தை வெளிக்கொணரும் அற்புத தெய்வீக ஹக்கலைப் பூஞ்சோலை, இவை யாவும் ஸ்தல யாத்திரீகர்களையும் உல்லாசப் பிரயாணிகளையும் ஈர்க்கும் கண்ணினையும் கருத்தினையும் கவருகின்ற தெய்வீகப் பதிகளாகும். இன்றும் ஏராளமான கதிர்காம யாத்ரீகர்கள் இவற்றைத் தரிசித்துச் செல்லத் தவறுவதில்லை.

எழில் மிகுந்த இக்குளிர் வலயத்தில் நீக்கமற நிறைந்து, அருளைப் பொழியும் ஸ்ரீ லங்காதீஸ்வரர் கோயிலை ஸ்தாபிப்பதற்குத் தூண்டுகோலாக இருந்த தவவலிமை பெற்ற அருள் திரு.முருகேசர் அவர்கள் இப்புனித நகரிலுள்ள இக்கோயிற் பூசகராகவும், ஆன்மீகக் கலாசார நிகழ்ச்சிகளுக்குப் பொறுப்பாளராகவும் மாறாத மனநோய் அங்கத்துறு நோய்கள் பல தீர்க்கும் அருமருந்து கொடுக்கும் மருத்துவராகவும் பணிபுரிகிறார்கள். பற்றற்றான் பற்றினைப் பற்றி வாழ்வாங்கு வாழும் அருள் திருமுருகேசர் அவர்களை சுவாமி எனவே பொதுவாக எல்லோரும் அழைத்து தக்க மதிப்புக் கொடுக்கின்றனர். இவருக்கு உறுதுணையாக ஸ்ரீ சிவபால யோகிகளின் அருட்பார்வைக்கு அருகதையாகிய ஆத்மீக உச்ச ஸ்தானம் பெற்ற அருள் திருமதி சீதாபாபு அம்மையார் அவர்கள் இக்கோயிற் திருப்பணிகளில் முக்கிய பங்கு பற்றி வருகிறார்கள். பால்பழம் மாத்திரம் உட்கொண்டு பிரதிஷ்டைக்கு இடையூறு வராமல் காப்பதற்காக 34 நாட்கள் லிங்கத்துக்கு அல்லும் பகலும் தியானப் பிரார்த்தனை, பூஜைகள் செய்யும் படி சுவாமிகளால் பணிக்கப்பட்ட பெருமை இவ்வம்மையாருக்குண்டு. இக்கோயில் சிவபாலயோகி மகராஜ் நம்பிக்கையுறுதியின் (Trust) கீழ் இயங்குகின்றது. இக்கோயிலின் தர்மகர்த்தாக்களாக மேற்கூறிய இருவரையும் திரு.பாபு அவர்களையும் சுவாமி நியமித்துள்ளார்கள்.

இக்கோயிலில் நாள் தோறும் நடைபெறும் காலை, மாலைப் பூஜை பிரார்த்தனைகளிலும் வாரமொருமுறையுள்ள விசேட வியாழக்கிழமைப் பூஜை வழிபாடுகளிலும் மாதமொரு முறை நடைபெறும் போயாத் தினத்திலும் சாதி, சமய பேதமற்ற மக்கள் கூட்டம் கலந்து கொள்கிறது. ஆண்டு தோறும் வருகிற மகா சிவராத்திரி விழா, நவராத்திரி விழாக்கள் மிக விசேடமாகக் கொண்டாடப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியாவிற்கு இந்து சமய வருகை

இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இந்தியாவில் வானுயர்ந்த கோபுரங்களைக் கொண்ட கோயில்கள் கால் இலட்சத்துக்கு மேல் இருக்கின்றன என்றால் அதைக் கண்டு நாம் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. உலகிலேயே மிகப் பெரிய இந்து ஆலயம் வெளிநாடாகிய இந்தோனேசியாவில் இருக்கிறது என்றால் யாரும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. இந்த விஷயம் இந்தியாவிலுள்ள இந்துக்களில் பெரும்பான்மையோருக்கே தெரியாது. இந்த நாட்டின் இந்துசமய வளர்ச்சிக்கு இந்தியா எந்தவித ஆதரவும் காட்டாது இருப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும்.

உலகில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக பெருந்தொகையான இந்துக்களைக் கொண்ட நாடு இந்தோனேசியாவாகும். பெரிய எண்ணிக்கையைக் கொண்ட இந்து ஆலயங்களையும் இந்துக் கல்லூரிகளையும் இந்து உயர் நிலைப் பள்ளிகளையும் கொண்ட இந்த நாட்டிற்கு இந்து சமயம் எப்போ வருகை தந்தது என்பதைக் கூறமுடியாத நிலையில் சரித்திராசிரியர்கள் திண்டாடுகிறார்கள்

ராப்லஸ் (Raffles) தாம் எழுதிய ஜாவா வரலாறு (History of Java) என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார். அதாவது அஜி சாகா(Ajisaka) என்பவர் தான் முதன்முதல் இந்த நாட்டிற்கு வந்த இந்துப்பெருமகனாவார். அவரே இந்து சமயத்தை இந்த நாட்டில் பரப்பினார். அதில் வெற்றியும் கண்டார். அவர் வந்த ஆண்டையே சாகா வருடம் (Caka Year) என்று இன்றும் பாலியில் (Bali) நடைமுறையில் குறிப்பிடுகின்றனர். பாலியில் உள்ள பழைய ஏட்டுச் சுவடிகளில் அகஸ்திய முனிவர்தான் இந்த நாட்டில் இந்து சமயத்தைப் பரப்பினார் என்ற செய்தி காணப்படுகின்றது. இன்று வரைக்கும் அவரின் நாமம் போற்றப்பட்டு வருவதோடு அவரின் சிலைகளை பாலியலும் மற்றைய இடங்களிலும் இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நாட்டிற்கு இந்துசமயம் வந்த வரலாறு பற்றியும் அது வந்த காலம் பற்றியும் இந்த நாட்டில் பலவிதமான கருத்துக்கள் நிலவி வருகின்றன.

இந்தியாவில் இருந்து இங்கு குடி புகுந்த இந்தியர்கள்தான் இந்த நாட்டு மக்களைத் திருமணம் செய்து கொண்டு ஒன்றாகக் கலந்து சுலபமான முறையில் இந்த நாட்டில் இந்துசமயத்தைப் பரப்பினார்கள் என்பது.

இந்தோனேசியர்களே இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு அவர்கள் அங்கு இந்து சமயத்தை நன்கு கற்று வந்து தமது சொந்த மொழியில் பல இந்துசமய நூல்களை இயற்றினார்கள் என்பது.

உலகம் முழுவதும் இந்துசமயமே இருந்த காலத்தில் இந்தோனேசியாவும் சமயத்தில் சிறந்து இருந்தது என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கருத்துக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இக்கருத்துக்களையேதான் இந்நாட்டு வரலாற்று அறிஞர்களும் கிட்டத்தட்ட ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இந்து சமயம் இந்நாட்டு மக்களின் வாழ்க்கையோடு இணைவதற்கு முன் இங்குள்ள மக்கள் பெரிய பெரிய மரங்களையும்,கற்களையும் பெரிய மிருகங்களையும் வணங்கினார்கள். மலை உச்சியில் தமது மூதாதையர்களை வணங்குவதற்கான இடங்களை ஒதுக்கி பெரிய சிலைகளையும் செதுக்கி வணங்கி வந்துள்ளனர். பிறப்பை முன்னிட்டும் இறப்பை முன்னிட்டும் பெரிய சடங்குகளை ஏற்படுத்தினர். இவை போன்ற சடங்குகளை இன்றும் இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

ஒரு நாட்டு மக்கள் மற்றைய நாட்டு மக்களோடு தொடர்பு கொள்வதற்கு பலப்பல காரணங்கள் உண்டு. வெளிநாட்டவர் இந்த நாட்டின் பால் கவனம் செலுத்தியதற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்று இந்த நாட்டின் செழிப்புமிக்க பூமியாகும். அடுத்த காரணம் இது இரண்டு சமுத்திரங்களுக்கு மத்தியிலும் கண்டங்களுக்கு மத்தியிலும் அமைந்திருந்தமை.

இந்தோனேசியர்கள் பரந்த மனப்பான்மை படைத்தவர்கள். வந்தவர்களை வரவேற்கும் தன்மை படைத்தவர்கள். இந்தோனேசியா இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் அமைந்திருந்தபடியினால் வியாபாரத்திற்காக இந்தியாவிலிருந்து சீனாவிற்கும், சீனாவிலிருந்து இந்தியாவிற்கும் சென்ற கப்பல்கள் இந்தோனேசியத் துறைமுகங்களில் தங்கிச் செல்ல வேண்டியிருந்தன.

கப்பலுக்குத் தேவையான தண்ணீர் சாப்பாட்டுச் சாமான்கள் யாவும் சேகரித்துக் கொண்டு செல்லும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. இத்தகைய தொடர்புகள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டுவிட்டன. காலப்போக்கில் இந்தியக்கப்பல்கள் இந்தோனேசியத் துறைமுகங்களில் நிறையக் காணப்பட்டன. இந்தோனேசியாவும் இந்தியாவுடன் நெருங்கிய வியாபாரத் தொடர்பு கொண்டு நல்லமுறையில் வாணிபம் செய்துவந்தது. இதனால் இந்த நாட்டிற்கு நிறைய இந்திய வியாபாரிகள் வரத் தொடங்கினர்.

இராமாயண காலத்தில் ஜாவா தீவிற்கு ஜவாடிவிபா என்ற பெயர் பிரபல்யமாக இருந்தது. யூனானி தேயத்தைச் சேர்ந்த பூகோள சாஸ்திர நிபுணர் பத்தலோமேடயஸ் என்பவர் இந்த ஜாவா தீவை ஜாபா தீவு என்று அழைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். தீவு என்பது தமிழ்ச்சொல். இந்தியர்கள் இதற்கு வேறு ஒரு பெயரும் சூட்டி உள்ளார்கள். சுவர்னாடிலிப்பா என்பதுதான் அப்பெயர் சுவர்னாடிலிப்பா என்றால் தங்கம் விளையும் நாடு என்பது பொருள். அக்காலத்தில் சுமாத்திரா தீவில் நிறையத் தங்கம் கிடைத்ததாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வத்தின் சுரங்க பூமி என்று தெரிந்து கொண்ட இந்திய வியாபாரிகள் வியாபார நோக்கோடு வந்த போதிலும் பழகுவதற்கும் நட்புக்கொள்வதற்கும் நல்ல மக்கள் என்பதை உணர்ந்து இந்நாட்டிலேயே குடியேற ஆரம்பித்தனர். அத்தோடு தங்களுக்கென நல்ல இடங்களைத் தேர்ந்தெடுத்து கம்பங்களை (கிராமங்களை) இடங்களைத் தேர்ந்தெடுத்து கம்பங்களை(கிராமங்களை) அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். ஒருவன் தனக்குச் சொந்தமான நிலம் என்பதைக் காட்டுவதற்காக அந்நிலத்தில் கம்பை முதலில் ஊன்றினான். அதிலிருந்தே கம்பம் என்ற பெயர் வந்தது. இன்றும் கோஜா காரர்கள் கம்பம் என்றும், கிலிங்காரர்கள் கம்பம் என்றும் இந்தோனேசியாவில் பல பாகங்களைப் பார்க்கலாம். இந்த நாட்டில் தமிழர்களை கிலிங்காரர்கள் என்று சொல்லும் பதம் இன்றும் உண்டு.

குடியேறிய இந்தியர்களும் பூர்வீக குடிமக்களும் ஒருவரை ஒருவர் போற்றி மதித்து நடந்து கொண்டதினால் நெருக்கமான உறவு ஏற்பட்டு கலாச்சார பரிமாற்றம் நடந்தேறியது. இந்த வகையில் தான் இந்த நாட்டில் இந்திய கலாச்சாரமும் சமயமும் வேர் ஊன்ற ஆரம்பித்தன.

இந்திய வியாபாரிகள் இந்த நாட்டில் முகாம்களை அமைத்துக் கொண்டு வாணிபம் செய்ய முன்வந்தவர்கள். இவர்கள் சமயச் சடங்குகள் தெரிந்த பிராமணர்களையும் உடன் கொண்டு வந்துள்ளார்கள். இந்தப் பிராமணர்களின் வழியிலேதான் இந்துப் பண்பாடு இங்கு வேரூன்ற ஆரம்பித்தது. இந்த நாட்டில் கிடைக்கப்பெறும் பெரும்படியான கல்வெட்டுகள் பல்லவகால எழுத்துக்களைக் கொண்ட சமஸ்கிருத பாஷையில் இருப்பதை இன்றும் காணலாம். இந்நாட்டில் நடைபெறும் இந்துச்சமயச் சடங்குகள் யாவும் பெரும் சமயச்சடங்குகள் யாவும் பிராமணீயத்தை ஒத்துள்ளன.

பிராமணர்களின் வருகை இந்நாட்டின் பூர்வீக குடிகளிடையே புதிய பிராமண வமிசம் உருவாவதற்கு ஏதுவாக இருந்தது. இந்த இந்துனேசியப் பிராமணர்கள் யாத்ரீகர்களாக இந்தியாவுக்குச் சென்று புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து தங்களைப் புனிதமாக்கிக் கொண்டதோடு இந்துசமய அறிவையும் வளர்த்துக் கொண்டனர். சிற்பக்கலை, சோதிடக்கலை, ஓவியக்கலைகளிலும் வல்லவராக விளங்கினர். இந்தியாவில் இருந்து திரும்பிய இந்துனேசியப் பிராமணர்கள் தான் இந்துனேசிய மொழியில் இந்து வேதங்களையும் இந்திய சாஸ்திரங்களையும் மற்றைய கலைகளையும் படைத்துள்ளனர். இந்துப் பண்பாட்டின் வருகையால் இந்த நாட்டில் அரசியல்முறைகளில் பெரிய மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன.

இந்துப் பண்பாடு இந்நாட்டிற்கு வருமுன் கிராமிய தலைவன் தான் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஏகபோகமாக ஆளும் அதிகாரத்தைப் பெற்றிருந்தான் இவன் ஆத்மீக பலம் பெற்றவனாகவும் மக்களுக்கு நல்ல பாதுகாப்பாளனாகவும் மக்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல வழியில் நடத்திச் செல்லுபவனாகவும் இருந்ததோடு கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதியை சுபீட்சத்தோடு வைத்து நல்ல புகழோடும் இருந்திருக்கின்றான். ஆரம்பத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவனே கிராமிய தலைவனாக வரமுடியும். காலப்போக்கில் தேர்தல் முறை மாறி ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பரம்பரையே இப்பதவியை வகிக்கும் நிலை ஏற்பட்டது.

மேற்படி இந்து கலாச்சாரத்தின் வருகையால் இதிலும் மாற்றம் ஏற்படலாயிற்று அரச பரம்பரையும் உருவாக ஆரம்பித்தது. பரந்த நிலப்பரப்பைக் கொண்டு பல அரசர்கள் ஆள ஆரம்பித்தனர். அப்படி முதலில் உருவான இந்து அரசாங்கம் தான் கூத்தாய் (Kutai) அரசாங்கம். இந்த அரசாங்கம் கூலிமண்தானில் (Kalimantan) மஹாகாம் (Mahakam) என்ற ஆற்றங்கரையில் நிறுவப்பட்டதாகத் தெரிகிறது. இந்த இடத்தில் தோண்டி எடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் சமயச் சடங்குகள் நடந்த விவரங்கள் உள்ளன. தென் இந்தியாவில் நடைமுறையில் இருந்த பல்லவ எழுத்தைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டு 1500 வருடங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்டுள்ளதற்கான தடையங்கள் கிடைத்துள்ளன. இந்தக் கல்வெட்டின்படி கூத்தாயை ஆண்ட முதல் அரசனின் பெயர் குண்டுரங்கா என்பதாகும். அவனுடைய மகனின் பெயர் அஸ்வவர்மன். அஸ்வவர்மனுக்கு வம்சகர்தா என்றொரு பெயரும் உண்டு. குடும்ப விருத்திக்காக வம்சகர்தா என்ற பெயரைச் சூட்டி உள்ளார்கள்.

அஸ்வவர்ம அரசனுக்கு மூன்று ஆண்பிள்ளைகள். இந்த மூவரில் மூலவர்மன் தான் பிரசித்தி பெற்றவன். மூலவர்ம அரசன் மக்களின் நலனில் அதிகம் கவனம் செலுத்தி நாட்டை நல்லவிதமாக நிர்வகித்து வந்ததோடு இந்து சமயச் சடங்குகளில் முக்கிய கவனம் செலுத்தி யாகங்கள் பல செய்து மக்களுக்கு மாடுகளைத் தானமாகக் கொடுத்து மக்களின் அன்பிற்கு ஆளானான் என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

ஐந்தாம் நூற்றாண்டிலேயே இந்துசமயம் இந்தோனேசியாவில் வேர் ஊன்ற ஆரம்பித்து விட்டதற்கான ஆதாரங்கள் நிறையக் கிடைக்கின்றன. ஆறாம் நூற்றாண்டின் மத்தியில் ஜாவாவில் வலுவான இந்து அரசாட்சி நடந்ததற்கான கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. ஒரு கல்வெட்டில் பின்வரும் செய்தி காணப் படுகின்றது. பரிசுத்தமான நீர் ஊற்று ஒன்று காணப்பட்டது. அப்புனித நீர் இந்தியாவிலுள்ள கங்கை நீருக்குச் சமமாகக் கூறப்பட்டுள்ளது. அதே கல்வெட்டில் திரிசூலம், பானைகள், சங்குகள் மற்றும் சில ஆயுதங்களின் படங்களும் காணக் கிடக்கின்றன. இவை யாவும் இந்துசமயச் சின்னங்களாகும்.

தாங் (Tang) என்பவர் சீனநாட்டு யாத்திரிகர். இவரது குறிப்பில் பின்வரும் செய்திகள் காணப்படுகின்றன. காலிங்கர்களின் பூமி செழிப்பான பூமி. மக்கள் செழிப்போடும் அமைதியோடும் வாழ்ந்து வருகின்றனர். அரசனின் சிம்மாசனம் தந்தத்தால் செய்யப்பட்டது. மக்கள் நல்ல கல்வி அறிவுடையவர்கள். வானசாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்றவர்கள். கலிங்கர்களில் ஒருபகுதியினர் தென்னங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளைக் குடிக்கிறார்கள். கலிங்கர்கள் உணவு உண்பதற்கு சீனர்களைப் போல் குச்சியையோ கரண்டியையோ உபயோகிக்காது கையையே உபயோகிக்கிறார் கள் என்று ஆச்சரியத்தோடு குறிப்பிட்டுள்ளார். ஜாவாவில் அமையப் பெற்ற இந்தக் கலிங்க அரசை சீமா என்ற அரசி ஆண்டிருக்கிறார். இவரின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் நேர்மையானவர்கள் என்றும் வீதிகளில் ஏதாயினும் பொருட்கள் காணக் கிடைத்தாலும் அதை அவ்வூர் மக்கள் தொடமாட்டார்கள் என்றும் தாங் தெரிவித் துள்ளார். இந்த நாட்டில் இன்றும் கிலிங் என்றால் தமிழர்களைத்தான் குறிக்கும். இந்த சீமாவின் ஆட்சிக்காலம் கி.பி 640 ஆகும்.

கி.பி 664 இல் ஈத்சிங் என்ற சீன யாத்திரீகரின் குறிப்பில் சீன புத்த குருக்கள், காலிங் (Keling) அரசுக்கு வந்து புத்த காவியத்தைச் சீன மொழியில் மொழி பெயர்த்துச் சென்றதாகத் தெரிவித்துள்ளார். ஒலிங்-காலிங்-கிலிங் என்ற பதம் இன்றும் தமிழர்களைக் குறிக்கும் ஒரு பதம். இந்தக் காலிங் அரசுக்கும் தமிழர் களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்பதைக் கவனிக்க வேண்டியதவசியம்.

சிறிய பல அரசுகளாகச் சிதறிக் கிடந்த அரசுகளை ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்து ஒரு பெரிய சாம்ராச்சியமாக அமைத்த பெருமை அரசர் 'ஆயம்வூருக்'கையும் அவர் தம் பிரதான மந்திரி 'காஜாமாடா'வையுமே சாரும். இவர்கள் அமைத்த சாம்ராச்சியம் தான் 'மாஜா பாயித்' என்ற சாம்ராச்சியம். இந்தோனேசியா முழுமையும் சிங்கப்பூர் (துமாசிக - Tumasik) மலாயா போன்ற நாடுகளும் உள்ளடங்கியதோடு சயாங்கா (Sian - Mungthai), மருதாமா (Birma), சம்பா (Kamboja), யாவானா (Tongkinamman), இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் நல்ல நட்புறவு பூண்டு பெரிய விரிவான முறையில் வாணிபத்தில் ஈடுபட்டு மக்களைச் சுபீட்சத்தோடும் அமைதியோடும் வாழ வழி வகுத்துத் தந்த தோடு நாட்டில் பல இந்து ஆலயங்களையும் பௌத்த ஆலயங்களையும் எழுப்பி மக்களைச் சமயவாதிகளாக வாழ வைத்தனர். இந்நாட்டின் சின்னம் இரண்டு மீன் (Minadwaya) கொண்டதுதான்.

1328 இல் மாஜபாயித் மன்னர் காலம் அடைந்தார். 1364 இல் பிரதான மந்திரி காஜாமாடாவும் காலமடைந்தார். வலுவான கைகள் ஓய்ந்த பிற்பாடு மாஜாபாயித் சாம்பிராச்சியத்தின் பதவி போய்விட்டதால் உள்நாட்டுக் கலவரங்கள் மூன்று மாஜாபாயித் சாம்ராச்சியம் ஆட்டங்கண்டு சிதறிப் போய் விட்டது. அதோடு மற்றச் சமயக் கொள்கையும் நாட்டில் வேரூன்ற ஆரம்பித்தது.

இந்நாட்டில் மக்கள் ஏற்றுக்கொண்ட இந்துசமயம் அரசர்களின் பாதுகாப்பில் தான் இருந்தது. மக்கள் இந்துசமயத்தைப் பேணிப் பாதுகாக்கப் பிராமணர்கள் விட்டுக் கொடுக்காது தாமே சமயத்தைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டு அரசர்களுக்கு ஆலோசகர்களாக இருந்தும், சமயத்தைப் பாதுகாக்காது சுகபோகத்தில் நீந்திக் கொண்டிருந்தனர். இச்சமயத்தில் இந்து சாம்பிராச்சியங்கள், அரசுகள் கவிழ்ந்தன. இத்தருணத்தில் இந்துசமயமும் ஆட்டங்கண்டு பின்தங்கி சிறுமை அடைந்தது. இந்தோனேசியா சுதந்திரம் அடைந்த பிற்பாடுதான் இந்து சமயத்திற்கு மறுபடியும் ஒரு மலர்ச்சி ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோனேசியாவில் வசிக்கும் ஒரு கோடி இந்துக்களும் நூற்றுக்கு நூறு இந்துக்களாகவே வாழ்கின்றார்கள். மக்கள் சமயக் கருத்துக்களை நன்கு மனதில் பதித்து நல்ல சமய ஒழுக்கமுள்ளவர்களாய் புரிந்துணர்வோடு வேற்றுமை இன்றி ஒற்றுமையோடு வாழ்கின்றார்கள். அரசாங்கமும் சமயக் கருத்துக்களைத் தவறான நோக்கத்தோடு பிரச்சாரம் செய்து மக்கள் மனதில் வேற்றுமை எண்ணங்களை ஏற்படுத்திவிடாமல் பார்த்துக் கொள்ளுகின்றது. இந்தோனேசியாவில் இந்துக்களின் எண்ணிக்கை சிறியதாக இருந்தாலும் அவர்கள் நாட்டிற்கு ஆற்றும் தொண்டும் கொண்டுள்ள விசுவாசமும் மிகவும் பெரியது.

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியை இந்தோனேசிய மக்கள் நன்குணர்ந்து தமது சமய வழிபாட்டிற்குரிய ஆலயங் களைத் தாமே அமைத்துக் கொண்டனர். இந்து சமயப் பண்பாடு, சிற்பக்கலை, நாட்டியக்கலை யாவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இன்றும் இந்தோனேசிய இந்துக்கள் தூய இந்துக்களாக உலக இந்துக்களுக்கும் மற்றைய சமயங் களுக்கும் எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருகின்றனர்.

நம்முடைய தேசிய மந்திரமாக இருப்பது தேசிய லட்சியமாக இருப்பது, மானிட வர்க்கத்திற்கே லட்சியமாக இருப்பது காயத்திரி மந்திரமாகும். வேதத்தினுடைய சாரம் காயத்திரியில் அடங்கி இருக்கிறது. மானிய வாழ்க்கையின் இலட்சியத்தை அது விளக்குகிறது. தத்துவப்பூர்வமாக காயத்திரி மந்திரத்தைச் சரியாக அறிந்து பிரயோசனப்படுத்துபவர்கள் இந்தோனேசிய இந்துக்கள். தினமும் காயத்திரி மந்திர ஜெபம் செய்வதில் அவர்கள் தவறுவதில்லை. இன்றும் சமையல் முடிந்ததும் ஆண்டவனுக்கு நைவேத்தியம் செய்து உண்ணும் பழக்கத்தைத் தவறாது மேற்கொண்டுள்ளனர். வேத உண்மைகளும் மகாபாரதம், இராமாயணம் போன்ற நூல்களில் படிப்பினைகளும் மக்கள் மத்தியிலே நன்கு பரப்பப்பட்டு வருகின்றன. ஆலயத்திற்கு அழகையும் கம்பீரத்தையும் கொடுப்பது கோபுரமே. கோபுரம் இல்லாத கோயில்களே இங்கு காணமுடியாது. கோபுர தரிசனத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து 'கோபுர தரிசனம் பாபவிமோசனம்' 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற மொழிகளை உண்மைப்படுத்தியுள்ளார்கள்.

இந்தோனேசியாவில் வசிக்கும் இந்துக்கள் நாட்டிற்குப் பக்தியோடும் விசுவாசத்தோடும் ஆற்றும் சேவை மிகப் 'பெரியது' என ஜனாதிபதியான 'சுஹார்த்தோ' சமீபத்தில் இந்துக்கள் மத்தியில் விதந்து கூறியுள்ளார்.

பிரகாசமாக விளங்கும் சூரியனை அதன் பிரகாசத்தாலேயேதான் காணமுடியும். அதேபோல் அதன்பின் முழுமையான வடிவமான இறைவனையும் அதே அன்பின் மூலமாகத்தான் உணர்ந்து கொள்ளமுடியும். இந்த அன்பை விட விலையுயர்ந்தது உலகில் வேறெதுவும் கிடையாது.

ச.சா.பாவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்குப் பக்தி அதிகம்?

அனுமன் ஸ்ரீராமரிடம் ஒருநாள் சந்தேகம் கேட்டான். "பிரபோ....தங்களிடம் மிகுந்த அன்பு.... பக்தி.... கொண்டவர் யார்?"

ராமர், தன் பெயரைச் சொல்லப் போகிறார் என்று காத்திருந்த அனுமனுக்கு அதிர்ச்சி.

"சந்தேகம் என்ன? என் மனைவி சீதா தேவிதான்! நான் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக அவள் நெற்றியிலும், வகிட்டிலும் செந்தூரம் இட்டுக் கொண்டிருக்கிறாள் பார்!" மனதுக்குள் வேண்டுமென்றே அப்பாவி போல் சொன்னார் இராமர்.

அடுத்தநாள்... உடம்பு முழுக்கச் செந்தூரம் பூசிக்கொண்டு வந்து நின்றான் ஆஞ்சனேயன். "பிரபோ.... இப்போது சொல்லுங்கள்" என்று அவன் கேட்டபோது, கலங்கிவிட்டார் இராமர்.

"நீதான்... நீயேதான்! என் அன்புக்கும் பிரியத்திற்கும் பாத்திரமானவன் நீதான்! உனக்கு யாரெல்லாம் செந்தூரம் பூசுகிறார்களோ அவர்களுக்கும் என் அருள் நிச்சயம்!" என்று சிலிப்புடன் சொன்னார் இராமர்!

01.06.2006 சேக்கிழார் குருபூசை,நமிநந்தியடிகள் குருபூசை.
02.06.2006 ஷஷ்டி விரதம்
04.06.2006 அட்டமி நவமி
07.06.2006 ஏகாதசி விரதம்
09.06.2006 பிரதோஷ விரதம், வைகாசி விஷாகம்
11.06.2006 பூரணை விரதம்
12.06.2006 திருஞான சம்பந்த நாயனாருக்கு குருபூசை
15.06.2006 சங்கடஹர சதுர்த்தி
18.06.2006 அட்டமி நவமி
21.06.2006 ஏகாதசி விரதம்
22.06.2006 கார்த்திகை விரதம்
23.06.2006 பிரதோஷ விரதம்
25.06.2006 அமாவாசை விரதம்
26.06.2006 நயினாதீவு நாகபூசணி அம்மன் கொடியேற்றம்
29.06.2006 சதுர்த்தி விரதம்
30.06.2006 மாணிக்கவாசகர் குருபூசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி

**காப்பு**

**ஆத்தி சூடி அமர்ந்த தேவனை**
**ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.**

ஆத்திசூடி – திருவாத்திப்பூமாலையை அணிந்த சிவபெருமான்; அமர்ந்த தேவனை – விரும்பிய பிள்ளையாகிய விநாயகக் கடவுளை; ஏத்தி ஏத்தி – துதித்துத் துதித்து; யாம் தொழுவோம் - நாங்கள் வணங்குவோமாக.

**தொடர்ச்சி.......**

**08. ஏற்பது இகழ்ச்சி.**
ஏற்பது – பிச்சையெடுப்பது; இகழ்ச்சி – மிக இழிவான செயலாகும்.

**09. ஐயம் இட்டுண்.**
ஐயம் - (இரந்து வருவோருக்குப்) பிச்சை; இட்டு உண் - முதலிற் கொடுத்துப் பின்னரே நீ உணவு உண்.

**10. ஒப்புரவு ஒழுகு.**
ஒப்புரவு – உலகநடைமுறையை (அறிந்து) ; ஒழுகு – நீயும் அதற்கமைய நடந்து கொள்.

**11. ஓதுவது ஒழியேல்.**
ஓதுவது – கல்வி கற்கும் வழக்கத்தை; ஒழியேல் - கைவிட்டு விடாதே.

**12. ஔவியம் பேசேல்.**
ஔவியம்- பொறாமை காரணமாக, வஞ்சனை நிறைந்த வார்த்தைகளை; பேசேல் - ஒருபோதும் நீ பேசாதே.

**13. அஃகம் சுருக்கேல்.**
அஃகம்- தானியங்களை (விளைவிப்பதை); சுருக்கேல்-குறைத்துக் கொள்ளாதே. (அளந்து கொடுக்கும் போது அளவைக் குறைக்காதே என்றும் கூறலாம்).

**14. கண்டொன்று சொல்லேல்.**
ஒன்று கண்டு – ஏதாவது ஒன்றைக் கண்டிருந்தும்; (ஒன்று) சொல்லேல்)-அதனைக் கூறாது காணாத பிறிதொன்றைக் கூறாதே.

**தொடரும்..........**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தா நேயர்களுக்கு......

*அன்புடையீர்,*

இறைவன் திருவருளினாலும் மகான்களில் நல்லாசியினாலும் பக்தர்களின் நல்லெண்ணத்தினாலும் ஆத்மஜோதி 14வது இதழ் வெளிவந்துள்ளதை அறியத் தருகின்றோம்.

சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும் தமது சந்தாவை உரிய காலத்தில் அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அன்பர்களைச் சேர்த்து உதவினால் ஆத்மீகத் தொண்டு பரவுவதற்கு உதவி செய்தவர்களாவீர்கள்

**ஆத்மஜோதி தியான மணிமண்டபம்**
**ஏழாலை**

தொடர்பு:-
**நா.முருகையா**
**ஊரெழு கிழக்கு**
**சுன்னாகம்.**

***என்றென்றும் உங்கள் ஆதரவு கிடைப்பதாக***

---

## ஆத்மஜோதி ஆயுள் சந்தா வழங்கியவர்கள்

**சிவஸ்ரீ நாகேஸ்வரக் குருக்கள்** - *கதிரைமலைச் சிவன் கோயில், சுன்னாகம்.*



# ஏழாலை அத்தியடி விநாயகர் மகோற்சவம்

**கொடியேற்றம் 02.06.2006 வெள்ளிக்கிழமை,**
**தேர்த் திருவிழா 10.06.2006 சனிக்கிழமை,**
**தீர்த்த திருவிழா 11.06.2006 ஞாயிற்றுக்கிழமை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயம்

ஏகநாதர் மகாராஷ்டிரத்தில் அவதரித்த மகான். பாவங்கள் செய்யாமல், புண்ணியங்களைக் கொஞ்சமாவது செய்து கொண்டு நல்வாழ்வு வாழ வழிகாட்டி வந்த உத்தமர்.

அவரிடம் ஒரு பக்தர் வந்து "சுவாமி, உங்களால் எப்படி புனித வாழ்வு வாழ முடிகிறது? சிறு பாவம் கூடச் செய்யாமல் எப்படி இருக்க முடிகிறது?" என்று கேட்டார்.

ஏகநாதர் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு சொன்னார். "என்னைப் பற்றிய எண்ணத்தை விடு. உன்னைப் பற்றி கவலைப்படு. இன்னும் ஒரு வாரத்தில் உனக்கு மரணம் வரும். இன்னும் ஆறே நாட்கள் தான் உனக்கு வாழ்வு, வேண்டியதைச் செய்."

பக்தர் நடுநடுங்கிப் போய் வீட்டிற்கு விரைந்தார். குடும்பத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளை அவசரம் அவசரமாகச் செய்தார். இதே கவலையில் காய்ச்சலாகப் படுத்து விட்டார். சிறு துன்பம் கூடப் பிறருக்குச் செய்யத் துணியவில்லை. சதா சர்வ காலமும் ஆண்டவனையே தியானம் செய்துகொண்டிருந்தார்.

ஆறாவது நாள் ஏகநாதர் பக்தரைப் பார்க்க வந்தார். பக்தர் அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினார். பெரியவர் கேட்டார் "அன்பனே! இந்த ஆறு நாட்களும் எவ்வளவு பாவம் செய்திருப்பாய்?"

"பாவமா? அதற்கு நேரமே இல்லையே! மரண பயம் என்னை பாவ வழிக்குப் போகவிடவில்லை. கடமைகளை அவசரம் அவசரமாக முடிக்கவே நேரம் போகவில்லையே" சுவாமி என்றார் பக்தர்.

"நான் ஏன் பாவமே செய்யாமல் அடக்கமாக வாழ்கிறேன் என்பதை இனியாவது புரிந்துகொள். மரணம் ஒவ்வொரு கணமும் நம்மை நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டால் போதும்" என்றார் ஏகநாதர்.

பக்தருக்கு அப்போதுதான் உண்மை புரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வெளியீடுகள்

வலி. தெற்கு பிரதேச சபை
06 JUN 2005
பொது நூலகம்
ஏழாலை

- ஆத்மஜோதி
- ஏழாலை
- ஈழத்துச் சித்தர்கள்
- முப்பெரும் சித்தர்கள்
- நவராத்திரிப் பாமாலை
- கேதாரபத்திரி யாத்திரை
- இந்தோனேசியாவில் 2 வருடம்
- திருமுறைக் கதைகள்
- அர்ச்சனை மாலை ஆத்மஜோதி மண்டப வெளியீடுகள்
- பிள்ளையார் பெருங்கதை
- சிறுவர்களுக்கேற்ற பிள்ளையார் கதை
- புதிய சைவ வினாவிடை (1)
- விதியை வெல்வது எப்படி
- கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்



பசுவதையை நிறுத்துவோம்
பசுவைக் காப்போம்.



ஒரு பசு 1000 பேருக்கு பால் கொடுக்கும்
ஒரு பசுவைக் கொன்றால் 25 பேர் சாப்பிடுவர்

இச்சஞ்சிகை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டப சபை திரு.நா.முருகையா அவர்களால்
இல:351 மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாணம்; ஐய்ராம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org